# தோத்திர பாமாலை



பதிப்பாசிரியர் : குலபதி ஆறுமுகம் கந்தையா J.P. அவர்கள்
வெளியிடுவோர்: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,
320, செட்டியார் தெரு, கொழும்பு. தொலைபேசி-334004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாமாலை

*அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்*
320, செட்டியார் தெரு, கொழும்பு – 11
தொலைபேசி : 334004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : 12 – 06 – 2000 திங்கட்கிழமை, நண்பகல் 12 மணி

பதிப்புரிமை :
*அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்*
320, செட்டியார் தெரு,
கொழும்பு – 11
தொலைபேசி : 334004

தொகுப்பாசிரியர் :
**ஆறுமுகம் கந்தையா** J.P அவர்கள்
"***அஷ்டலக்ஷ்மி***" அதிபர்

உதவி :
**திருமதி. சிவசக்தி குணசீலன்** அவர்கள்
**37005, Plaze Dr. APT 1207**
**Santa ANA CA 92704**
**U.S.A**

**விலை ரூபா 150/=**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தமிழகக் சீரமைப்பு வல்லுநர் குழுத் தலைவர்
கயிலைமாமுனிவர் வித்துவான்

## சாந்தலிங்க இராமசாமியடிகள்

அவர்களின்

# வாழ்த்துப்பா

செந்தமிழ் வளமை சேரும் இலங்கையில் கைத்தடிக்கண்
கந்தையா சிவநெறிக்குக் கனிவுடன் செய்யும் தொண்டு
சிந்தனையாளர் போற்றும் செயல்களாய் விளங்கும் நாளும்
வந்தனை செய்வார் போற்றும் திருமுறை பதித்தார் வாழி

திருமுறைப் பாக்களோடு திகழ் துதிப்பாடல் சேர்த்து
கருதும் நல்லன்பர் போற்றிக் கனித்த சிந்தையாய் பத்தி
பெருகும் நல்வழிபாட்டிற்கு பெருந்துணையெனப் பதித்து
தருவது சமய வாழ்வு தழைத்திடும் திருத்தொண்டாகும்.

ஆறுமுகம் பேர்க் கந்தையா அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தில்
கூறும் தெய்வப்பாடல்கள் குழந்தைகட்காம் நூற்றொகுதி
வீறு பெறவே பதிப்பித்து வேண்டுவோர்க்கு வழங்குகின்றார்
ஆறும் சேரும் சடையண்ணல் அருளால் வாழ்க பல்லாண்டு

அன்புள்ள
சாந்தலிங்க இராமசாமியடிகள்

பேரூராதீனம்,
பேரூர் (அஞ்சல்)
கோயம்புத்தூர் 641 010
தமிழ்நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநாம மகிமை

கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்துள்ளது, எல்லாவற்றையும் இயக்குவது என்று பொருள். ஆனால் நாமோ தற்காலத்தில் கடவுள் என்றால் மனதிற்குப் பிடித்த மனிதா் என்று அா்த்தம் செய்து கொண்டு புகழ் பெற்ற மனிதப் பிறவிகளை மறந்து விடுகின்றோம். இந்த அவல நிலை மாறி கடவுளை வழிபட்டு நலம் பெற வேண்டும் என்பதால் கடவுளின் இயல்புகளையும் தன்மைகளையும் எடுத்துக் கூறும் பன்னிரு திருமுறைகளுடன் சிவநாமங்களையும் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

சிவ வழிபாடு இல்லாத காலமே இல்லை உலகம் உண்டான நாளிலிருந்து சிவவழிபாடு இருந்து வருகின்றது. ஈ எறும்பு முதல் யானை வரை, புல் போன்ற தாவரம் முதலாக பிரம்மா விஷ்ணு போன்ற தேவா்கள் வரை சிவன் எல்லோருக்கும் தெய்வமாக உள்ளான். அசுரா்களுக்கு ஒரு தெய்வம், தேவா்களுக்கு ஒரு தெய்வம், மனிதா்களுக்கு ஒரு தெய்வம், பறவை மிருகங்களுக்கு ஒரு தெய்வம் என்றெல்லாம் தனித்தனியாக இருக்கமுடியாது. எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் தெய்வமாக இருப்பதாலேயே சா்வேசுரன் விசுவேசுவரன் என்று பெயா்கள் அமைந்தன. மிகப் பழமையான காலத்திலிருந்தே மக்கள் சிவனை ஆயிரம் பெயரால் வழிபட்டு வந்துள்ளனா், மகாவிஷ்ணு நாள்தோறும் சிவ கசஸ்ரநாமம் ஓதி ஆயிரம் தாமரை மலா்களால் அா்ச்சனை செய்து பரமேசுவரனிடமிருந்து சுதா்சனம் என்ற வலிமை மிக்க சக்கராயுதத்தைப் பெற்றாா்.

ஒருவா் விளையாட்டாகக் கல்லை மேலே எறிந்தாலும் அது நிச்சயமாக பூமியிலே வந்து விழுவது போல ஒருவா் விளையாட்டாகத் தன்னையறியாமல் சிவகாரியம் செய்தாலும், சிவநாமம் ஓதினாலும் பரமேசுவரனது திருவருள் நிச்சயம் கிடைக்கின்றது. சிவலிங்கத்தின் மேல் வில்வ இலைகளை உதிா்த்த குரங்கு முசுகுந்தச் சோழச் சக்கரவா்த்தியாகப் பிறந்தது. சிவலிங்கத்தின் மேல் வலை பின்னிய சிலந்தி கோச்செங்கண் சோழச் சக்கரவா்த்தியானது. பரமேசுவரன் கோயிலில் விளக்கைத் தூண்டிய எலி மகாபலிச் சக்கரவா்த்தியானது. பரமேசுவரன் கோயிலில் விளக்கைத் தூண்டிய எலி மகாவலிச் சக்கரவா்த்தியானது. பன்னிரண்டு பன்றிக் குட்டிகள் பரமனருள் பெற்று பாண்டியனின் சேனை வீரா்களாயின. குரங்கு மட்டும் என்ன எந்த உயிரினமும் மனிதன் ஆகலாம், சிவநாமம் ஓதி எந்த மனிதனும் தேவனாகலாம் என்பதே புண்ணிய பாரத நாடு கண்ட மெய்ஞானம் கூறும் மாபெரும் உண்மை

**வல்லான் ஒருவன் கைமுயன்று எறியினும்**
**மாட்டா ஒருவன் வாளா எறியினும்**
**நிலத்தின் வழா அக் கல்லே போல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நலத்தின் வழார் நின் நாமம் நவின்றோரே.**

என்று பட்டிணத்தடிகள் போற்றுகின்றார். வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயவே என வேதமந்திரங்களைவிடச் சிறந்த மந்திரம் சிவநாமமாகிய நமச்சிவாய ஆகும். இதனாலேயே நம் முன்னோர்கள் குழந்தைகளுக்கு சிவன் திரு நாமத்தை இட்டு அழைத்து வந்தனர். நன்மை தீமை எதுவானாலும் சிவ சிவ என்றும் ஹரஹர (ஹரோஹரா) என்றும் சொல்லிவந்தனர். ஆனால் தற்காலத்திலோ ஐயோ ஐயோ (ஹாய் ஹாய்) என்று அலறுகிறார்கள். குழந்தைகளுக்கும் புரியாத மொழியில் வாயில் நுழையாத வார்த்தைகளாக அர்த்தமின்றிப் பெயர் வைத்து வாழ் நாளையும் நாக்கையும் வருத்தப்படுத்தி வீணாக்குகிறார்கள். உயிர்கள் பூவில் நிறைந்துள்ள நறுமணத்தைக் காற்றின் மூலம் நுகர்வது போல பாரெங்கும் நிறைந்துள்ள பரமன் திருவருளைப் பக்தியினால் பெறுகின்றன. மனிதர்கள் உண்டாக்கி வைத்த பிளாஸ்டிக் பூவிலும் காகிதப்பூவிலும் நறுமணம் இல்லாதது போல் மனிதர்கள் உண்டாக்கி வைத்த செயற்கைச் சமயத்திலும் பொய்த் தெய்வ வழிபாட்டிலும் பலன் இருப்பதில்லை. பொய்யை விடுத்து இயற்கையை ஒட்டி மெய்பொருளைப் பற்றுவதே ஆன்மீகம் ஆகும். அதுவே மெய்யறிவின் பயன்.

"அத்தேவர் தேவர் அவர் தேவர் என்று இங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாத என் பற்று அற நான் பற்றி நின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய்க் கோத்தும்பீ"

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக
பற்று விடற்கு"

என்று மாணிக்கவாசகரும் திருவள்ளுவ நாயனாரும் கூறியவாறு யாவரும் ஆன்மீக மரபிற்கு ஏற்ப எல்லோருக்கும் தாய் தந்தையாகிய மெய்த் தெய்வத்தைப் பற்றி சிவபூசை செய்து பரம் பொருளுக்கு நன்றி செலுத்தி பிறவியெடுத்த பலனை அடைவார்களாக. உணவிலும் சைவராக உணர்விலும் சைவராக விளங்கி உண்மையாக கருணையுள்ள மனிதர்களாக வாழ்வார்களாக.

சிவன்பேர் சொல்வது மாபெரும் தவம்
சிவம் இல்லையேல் எல்லாம் சவம்
திருசிற்றம்பலம்

*அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்*
320, செட்டியார் தெரு, கொழும்பு – 11
தொலைபேசி : 334004

அன்புடன்
**ஆறுமுகம்கந்தையா**
**பதிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகப்பு | |
| 2. | சாந்தலிங்க இராமசாமியடிகள் வாழ்த்துப்பா | |
| 3. | முன்னுரை | |
| 4. | சைவசமயசாரம் | 01 |
| | | 07 |
| 5. | ஆலய தரிசனவிதி | 10 |
| | | 12 |
| 6. | சைவசமயகுரவர் துதி | 35 |
| | | 85 |
| 7. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் 1–3 (திருமுறைகள்) | 106 |
| 8. | திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் 4–6 (திருமுறைகள்) | 171 |
| 9. | சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் 7ம் திருமுறை | 174 |
| 10. | மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், திருக்கோவையார் 8ம் திருமுறை | 181 |
| 11. | திருவிசைப்பா | 185 |
| 12. | திருப்பல்லாண்டு | 222 |
| 13. | பெரியபுராணம் | 230 |
| 14. | திருப்புகழ் | 236 |
| 15. | பட்டினத்தார் பாடல் | 241 |
| 16. | வள்ளலார் அருளிய பாடல்கள் | 243 |
| 17. | தாயுமானவர் பாடல்கள் | 246 |
| 18. | கால பயம்போக்கும் காலபாசத் திருப்பதிகம் | |
| 19. | சிவஞானபோதம் | |
| 20. | யோகர் சுவாமிகள் அருளிய எங்கள் குருநாதன் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய சாரம்

இவ்வுலகில் மனிதராகப் பிறந்தவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான பொருள்கள் மூன்று ஆகும். முதலில் நாம் நம்மைப் பற்றி நன்றாய் அறிந்து கொள்ள வேண்டும்.அதன்பின் நம்மை நடத்துகின்ற இறைவனைப் பற்றியும் அறிந்து தெளியவேண்டும். நமக்கும் இறைவனுக்கும் இடையில் நின்று இறைவனை அடையமுடியாதபடி தடுக்கும் தடைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். இம்மூன்றையும் பசு,பதி, பாசம் எனவும்: உயிர்,இறை, தளை எனவும் ஆன்றோர் கூறுவர். இதனைக் காசிபர்.

**"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்**
**மூன்றுள மறையெல்லாம் மொழிய நின்றன**
**ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை வான்றிகழ்**
**தவையென வகுப்பர் அன்னரே என்றனர்."**

நாம் இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களையும்பற்றி ஆராய்கின்றோம். ஆனால் நாம் நம்மைப் பற்றி ஆராய்வதில்லை.

"நான்" என்பது ஆன்மா அல்லது உயிர் எனப்படும். இவ்வான்மா என்ற ஒன்றில்லை எனச் சிலர் கூறுவர். வேறு சிலர் உடம்பே ஆன்மா என்றும், இந்திரியங்களே ஆன்மா என்றும், அந்தக்கரணங்களே ஆன்மா என்றும் பிராண வாயுவே ஆன்மா என்றும் கூறுவர். இவர்கள் கூற்றைச் சிவஞான போத ஆசிரியர் மறுத்து, ஆன்மா தனித்த பொருளென நிலை நிறுவுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லில் உமியும் தவிடும் முளையும் அரிசியைச் சூழ்ந்து உறைவது போல, ஆன்மாவை ஆணவம் கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் செம்பில் களிம்பு போல, ஒட்டி வாழ்கின்றன. இவைகள்தான் கடவுளை அடைய முடியாதபடி நம்மைக் தடுக்கும் தடைகள். இத்தடைகளை அகற்றி இறைவனை ஆன்மா அடைந்து இன்புற்று வாழ்வதற்கு அமைந்தவைகளே சமயங்களாகும்.

2. இம் முப்பொருள் உண்மையை ஆலயங்களில் விளங்கக்காட்டியுள்ளார்கள். எல்லா ஆலயங்களிலும் மூலஸ்தானம் அல்லது கர்ப்பகிருஹம் என்ற ஒன்று உண்டு. அம்மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டு இருக்கும் மூர்த்தியே இறைவன்ஆவான்.அவ்விறைவனை நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் நந்தி, மயில், கருடன் முதலியவைகளே ஆன்மாவாகும். அதன் பின் நிறுவப்பட்டிருக்கும் பலிபீடமே பாசம் அல்லது தடை ஆகும். எல்லாக் கோயில்களிலும் இம்மூன்றையும் அமைத்து முப்பொருள் உண்மையை விளக்கியுள்ளார்கள். ஆகவே சமயத்தின் சாரம் இம்முப்பொருள் உணர்வே ஆகும் எனக்கூறலாம்.

## இறையுணர்வு

இறைவன் ஒருவன் உளன்" எனவோ "இலை" எனவோ கூறாது இவ்வுலகம் இனிது நடக்க இறைவன் என்ற ஒருவன் வேண்டும் என நமது சமயம் கூறுகின்றது அவ்விறைவன் **அகளனாகவும்** அதாவது வடிவம் இல்லாதவனாகவும் **சகளனாகவும்** அதாவது வடிவம் உள்ளவனாகவும் இருக்கின்றான். அகளனாய் அவன் இருக்கும்போது அவனை நமக்கு அறிந்து கொள்ள முடியாது. அதற்காகவே இறைவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகள நிலையிலிருந்து சகள நிலைக்கு வருகின்றான். அச்சகள நிலையினையே ஆலயத் திருவுருவங்களாக அமைக்கப்பட்டுள்ளன. நம் பொருட்டு ஆண்டவன் சகள உருவம் தாங்கி வந்தால் அவனை ஆன்மாக்களாகிய நாம் ஆலயங்களில் அமைத்து வழிபட்டு, பூசித்து விழாக்கள் கொண்டாடி வாழ்வதை "சதாசிவமூர்த்தி" என்பர். சிவலிங்கத்தின் அடிப்பாகம் நான்கு பக்கமாய் அமைக்கப்பட்டு "அயன்" அல்லது பிரமனையும்: நடுப்பாகம் எட்டுப்பட்டமாய் அமைக்கப்பட்டு "மால்" அல்லது விஷ்ணுவையும் மேல்பாகம் நீண்ட உருண்டை வடிவமாக அமைக்கப்பட்டு உருத்திரனையும் உணர்த்துகின்றன. இம்மூர்த்திகள் சதாசிவமூர்த்தி தன்னுள் கொண்டு தண்ணளி புரிகின்றார். இறைவன் உலகுக்குச் செய்யும் பேருபகாரம் அழிந்தொழிந்த உலகத்தைத் திரும்பவும் ஆக்கி கேவல நிலையில் கிடந்த ஆன்மாக்கள் வாழ்வதற்கு உலகம், உடம்பு, உடம்பின் உட்கருவிகள், போகப் பொருள்கள் இவற்றை அமைத்துத்தருவதே ஆகும்.

உலகம் மாசங்காரத்தால் அழிக்கப்பட்டபோது பராபரையாகிய இறைவி பரனை வேண்டிக்கொள்ள பரைக்கு இரங்கிய பரன், அவள் வேண்டுதலின்படி நமக்கு தனு கரண புவன போகங்களை அளித்து 1. ஆக்கல் (2) அழித்தல் (3) அளித்தல் (3) மறைதல் (4) அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் இனிது நடத்தி வருகின்றான். அவற்றை நடராஜர் திருவுருவம் நன்கு விளக்கும். ஆக்கல் தொழிலை உடுக்கையும், அழித்தல் தொழிலை தீயும், அளித்தல் தொழிலை அபயக்கரமும், மறைத்தல் தொழிலை ஊன்றிய திருவடியும், அருளலை தூக்கிய திருவடியும் உணர்த்துகின்றன. இவ்விறைவன் உலகத்தை மாயையிலிருந்து தோன்றச் செய்கின்றான். உலகம் ஒரு பருப்பொருள் (Matter). மாயை ஒரு நுண்பொருள் (Energy) விஞ்ஞானத்தாலும், விஞ்ஞானக்கருவிகளாலும் பருப்பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய முடியுமே தவிர, நுண்பொருளை ஆராய இயலாது. நுண்பொருளை ஆராய்வதற்குரிய கருவி மெஞ்ஞானம் ஆகும். அழிந்த உலகம் சிதறிச் சிதறி பரமாணுவாகப் போய்விடுமென்பர் விஞ்ஞானிகள். பரமாணுவை நசுக்கிவிட்டால், அது எங்கோ போய்விடுகிறது. அது எப்படி ஆகிறது என்று எங்களுக்கு விளங்கவில்லை என்பது விஞ்ஞானிகளின் கொள்கை. அதனை நன்றாக விளக்குவது சமயம். பருப்பொருள் அழிந்தால் ஒரு நுண்பொருள் ஆகும். Matter energy யாய் மாறும். அவ்வாறு பருப்பொருள் மாய்ந்து போவதை "மாய்" எனவும் அதிலிருந்தே எல்லாம் ஆகி வருவதால் "ஆ" எனவும் கொண்டு "மாயா" என்று அந்த நுண்பொருளை (Energy) க் கூறினர். அம் மாயையே உலகம் தோன்றுவதற்கு முதற்காரணமாயிற்று, விஞ்ஞானத்தால் அறிந்துகொள்ளமுடியாத இடத்தில் மெஞ்ஞானம் தோன்றுகிறது.

இறைவன் நிமித்த காரணன். மண்ணிலிருந்து ஒரு தொழிலாளி ஒரு குடத்தைச் செய்கிறான். குடத்திற்கு முதற் காரணம் மண் ஆகும். தொழிலாளி நிமித்த காரணமாகின்றான். தொழில் செய்வதற்கு உதவும் கருவி அல்லது தண்ட சக்கரம் துணைக் காரணமாகிறது. அத்துணைக் காரணத்தையே "பரை" சக்தி எனக் கூறுகிறோம். ஆலயங்களில் சிவலிங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் ஆவுடையாகிய மனோன்மணியும், மஹேஸ்வரனோடு காட்சி அருளும் மகேஸ்வரியும், உருத்திரனோடு விளங்கும் உமாதேவியும் இப்பரையை உணர்த்துகின்றனர். இறைவன் அம்மையப்பராய் காட்சியளிப்பதன் கருத்து இதுவேயாகும்.

3. இவ்வம்மையப்பராய் போகவடிவில் இருந்து உயிர்களாகிய நமக்கு போகத்தை புணர்த்துகின்றான். அவன் ஞானாச்சாரியனாய் "தக்ஷிணா மூர்த்தி" என்ற பெயரோடு கல்லால் நிழலில் சின் முத்திரை தாங்கி அருள் புரிகின்றான். சின் முத்திரையின் கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம் முதலிய மலங்களிலிருந்து நீங்கி உயிர் இறைவனை அடைந்து ஒன்றி வாழ வேண்டுமென உணர்த்துவதேயாகும்.

## பாசம்

ஆணவம் முதலிய பாசங்கள் அனாதியாகவே உள்ளன. அவை இருள்போல நின்று உயிர்களின் அறிவை மறைப்பன இப் பாசங்கள். கதிரவன் முன் நிற்க ஆற்றாது அழிந்து ஒழியும் இருள்போல இறைவனைச் சென்று அணுகாது. இருள் நம்மை அணுகித் துன்புறுத்துவதுபோலபாசமும் துன்புறுத்தும். இத்துன்பத்திலிருந்து நீங்குவதற்கு ஏக மார்க்கமாயிருப்பது இறைவனை அடைதலேயாகும்.

## இறைவனை அடையும் வழி

இறைவனை அடைவதற்கென்று நம் முன்னோர் நன்மார்க்கங்கள் நான்கு வகுத்தார்கள். 1 சரியை 2 கிரியை 3 யோகம் 4 ஞானம் எனப்படும்

## சரியை

சரியைத் தொண்டிற்குத் தக்க இடம் ஆலயங்களேயாகும். கோயிலில் அலகிடுதல், மெழுகுதல், பூமாலை கட்டுதல், புகழ்ந்து பாடுதல், திருவிளக்கிடுதல் இவை சரியைத் தொண்டாகும். இப்பணிகள் திருக்கோயில்களிலே நடைபெறுகின்றன. இப்பணிகள் புரிந்தவர்க்கு ஈசன் தனது உலகத்தில் வாழ்வளிக்கின்றான்.

## கிரியை

இறைவனை கும்ப பிம்பங்களில் மலர், மஞ்சனம், அமுது முதலியவைகளைக் கொண்டு பூசித்து பஞ்ச சுத்தி செய்து பக்தியோடு வழிபடுவதே கிரியையாகும். இக்கிரியை ஆலயங்களில் என்றும் நடைபெற்றுவரும் பூசையே இனிது விளக்குகிறது. இதனை இனிது நடத்தி வருவோர் இறைவனது பக்கத்து அமரும் பாக்கியம் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகம்

யோகம் எட்டு வகைப்படும். இவ்வட்டாங்க யோகத்தை கைக்கொண்டு வாழ்பவர் இறைவனது உருப்பெறுவர்.

## ஞானம்

இறுதியான ஞானம் (1) கேட்டல் (2) சிந்தித்தல் (3) தெளிதல் (4) நிட்டை கூடுதல் என நான்கு வகைப்படும்.

விரும்பும் சரியை முதல் மெஞ்ஞானம் நான்கும், அரும்பு, மலர், காய்கனிபோல் அன்றோ பராபரமே என்பர் தாயுமானவர். இந்நான்கு மார்க்கங்களை மேற்கொண்டு ஒழுகின் அவரை ஆட்கொள இறைவனோ, இறைவனது அருள் பெற்றவர்களோ எழுந்தருளுகின்றனர். அவர்கள் நமது பாசங்களை அறக்களைந்து உபதேசம் அருளி உதவுவர். இவ்வாறு குரு அருள் பெற்ற ஆன்மா இருவினை ஒப்பு எய்துகின்றது. அதனைப்பற்றி நின்று மலபரிபாகம் அடைகின்றது அப்போது சத்தி நிபாதம் அல்லது திருவருள் பதிவுபெற்று முத்தியடைகின்றது. முத்தியடைந்த ஆன்மாவுக்கு பிறவி நோய் இல்லை. இப்பரமுத்திரையை அடையாத ஆன்மாக்கள் பிறந்து இறந்து துன்புறும். இப்பாழ்த்த பிறப்பு அறுத்திடுவதே மக்களாய்ப் பிறந்தோரின் தக்க நற்பணியாகும். அதற்கெனவே சமயமும் சாத்திர தோத்திரங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றால் சமயத்தின் சாரம் (1) இறை (2) உயிர் (3) தளை எனும் முப்பொருளில் அடங்கும் எனவும், அம்முப்பொருள் நிலையை நன்குணர்ந்து பாசவயப்பட்ட ஆன்மா அப்பாசத்தை அறக்களைந்து பரமனடி அடைந்து இனிது வாழ்வதேயாகும் எனவும் தெள்ளிதில் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய தரிசன விதி

சைவசமயிகள் ஒவ்வொருவரும் தினம் தோறும் திருக்கோவிலுக்குச் சென்று விதிப்படி பயபக்தியுடன் சுவாமி தரிசனஞ் செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சுவாமிதரிசனஞ் செய்ய இயலாதவர், சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசஷ்டி ஸ்கந்த சஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலேனும் தவறாது செய்தல் வேண்டும்.

சுவாமி தரிசனம் செய்ய விரும்புவோர், திருக்கோயிலுக்குச் சமீபத்திலேயுள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த உடைதரித்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக் கொண்டு பரிசுத்தமாகக் கோயிலுக்குப் போதல் வேண்டும்.

போகும்போது ஒரு பாத்திரத்திலே தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், பத்திரபுஷ்பம் முதலியன வைத்து அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு போதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்குச் சமீபித்ததும், தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டுகைகளையும் சிரசிலே குவித்துக் கடவுளை மனதிலே தியானித்துக் கொண்டே உள்ளே பிரவேசித்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமுஞ் செய்தல் வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

அஷ்டாங்க நமஸ்காரமாவது : தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு அங்கங்களும் நிலத்திலே தோயும்படி வணங்குதல்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்புக்களும் நிலத்தலே தோயும்படி வணங்குதல்.

திரயாங்க நமஸ்காரமாவது : சிரசிலே இரண்டுகைகளையுங் குவித்தல்.

நமஸ்காரம் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டுதரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம், இருதரம் பண்ணல் கூடாது.

நமஸ்காரம் பண்ணும்போது கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் சிரசைவைத்து நமஸ்காரஞ் செய்தல் வேண்டும்.

நமஸ்காரம் செய்து முடிந்தவுடனே எழுந்து பிரதடக்ஷிணம் பண்ணல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானை மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பதினைந்துதரமாயினும், இருபத்தொருதரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டு தரமும் பார்வதி தேவியாரையும் விஷ்ணுவையும் நான்கு தரமும் பிரதக்ஷிணப் பண்ணல் வேண்டும்.

பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே ஸ்தூபி நிழலேனுப் துவஜஸ்தம்ப நிழலேனும் இருப்பின் அந்நிழலில் மூன்று கூறுநீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லல் வேண்டும். சுவாமி உற்சவங்கொண்டருளுங் காலத்திலே உடன் செல்லும்பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காது செல்லலாம்.

அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதக்ஷிணப் நமஸ்காரம் முதலியவை பண்ணலாகாது.

பிரதக்ஷிணம் முடிந்தவுடன் சந்நிதானத்தில் மீண்டுப் நமஸ்காரஞ் செய்து உள்ளே போய்க் கடவுளைத் தரிசித்து சுத்தமான சித்தத்துடனே பக்திரஸம் மிகுந்த தோத்திரங்களை இயன்றமட்டும் இராகத்துடனே பாடித்துதி செய்தல் வேண்டும்.

பின் அர்ச்சகரைக் கொண்டு பத்திர புஷ்பங்களினால் சுவாமிக்கு அர்ச்சனை செய்வித்து தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், முதலியவற்றை நிவேதிப்பித்து, கற்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணுவித்து, அவருக்குத்தம்மால் இயன்ற தக்ஷிணைகொடுத்து அவரிடமிருந்து விபூதி பிரசாதங்கள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பின் சுவாமியைத் தரிசித்துக் கொண்டு, புறங்காட்டாது பலிபீடத்துக்குஇப்பால் வந்துநமஸ்காரம்செய்து வடக்குமுகமாக இருந்து சுவாமியை மனத்திலே தியானஞ் செய்து கொண்டு தன்னால் இயன்ற உரு அவருடைய மந்திரம் ஜெபித்துப் பின் எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயகுரவர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூர்திருத் தாள்போற்றி

## சைவசமயகுரவர் திருநட்சத்திரம்

சித்திரைச் சதயம் அப்பர், சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம் பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

## சைவசமயகுரவர் வயசு

அப்பருக் கெண்பத்தொன்(று) அருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்(கு)
அந்தம் பதினா றறி.

## 1. சம்பந்தர் பாடலின் அற்புதம்

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அப்பர் சுவாமிகள் பாடலின் அற்புதம்

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழல்கொள் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் ஆனை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிடந் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவுதானுங் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லும் மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.

## 3. சுந்தரர் பாடலின் அற்புதம்

வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட நிற்குமே
செங்கல் லானது தங்கம தாக்குமே
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

## 4. திருவாதவூரர் பாடலின் அற்புதம்

பெருகும் வையை தனைஅழைப் பிக்குமே
பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியை வாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பே சுவிக்குமே
பரிவிற் பிட்டுக் குமண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழு தக்கோ வைபாடுமே
வருகம் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்
அருளிச் செய்த
# தேவாரம்
## முதலாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலி தேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமரை வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்குலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

**திருப்பிரமபுரம் திருவெழுகூற்றிருக்கை வியாழக்குறிஞ்சி**

ஒருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை

ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்

கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோடு
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல் சூழ்வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை

வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறு மமணரு மறுவகைத் தேரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும்

மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்

அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லை நீணிலத்தே

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துயர் களையும் திருப்பதிகம்**

**இகவாழ்வில் நாள், கிரகம், நோய், மரணம் போன்ற பல இன்னல்களினால் உயிர் துன்பமடைகின்றது. இத்துன்பம் நீங்கி, உயிர் நல்வாழ்வு வாழ்வதன் நற்கதியடைய வேண்டி திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய துதிப்பாடல்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. இவை சைவர்களின் நித்ய பாராயணத்தில் விசேஷ இடம் பெற்றுள்ளன.**

## கோளறு பதிகம் இரண்டாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமனை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆனை நமதே.

திருச்சிற்றம்பலம்.

**பொது** **நமச்சிவாயத் திருப்பதிகம்** **கௌசிகம்**

மூன்றாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெல்லாம்
நம்ப னாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாமம் நமச்சி வாயவே.

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன நாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உடைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாமம் நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓதுநாமம் நமச்சி வாயவே.

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சிந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்..

**பொது** **பஞ்சாக்கரத் திருப்பதிகம்** **காந்தாரபஞ்சமம**

மூன்றாம் திருமுறை

## திருவைந்தெழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே

வீடுபி றப்பை அறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தோறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடிஉ கப்பன அஞ்செ ழுத்துமே

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்வணன் நான்முகன் காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே.

திருச்சிற்றம்பலம்.

***திருஞான சம்பந்த நாயனார் சமணர்களை வெல்லும் பொருட்டு மதுரைக்குச் சென்று இப்பாடல்களைப் பாடிகூன் பாண்டியனின் வெப்பு நோயை நீக்கி, சைவத்தின் பெருமையை மீனக் கொடியோன் உணரச்செய்தார்.***

## திருநீற்றுப் பதிகம்

இரண்டாம் திருமுறை

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயன் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பதுநீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திருவால வாயன் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயன் திருநீறே.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணத் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயன் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயன் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம மாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயன் திருநீறே.

எயிலது வட்டம் நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயன் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயன் திருநீறே.

மாலோ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம் பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீரு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயன் திருநீறே

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்டபொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்த மால வாயன் திருநீறே

ஆற்ற லடல்விடை யேறு மால வாயன் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசிரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

## திருக்கேதீச்சரம்

இரண்டாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

விருது குன்றமா மேருவி னாணர
வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் வீணையர் பலபல சரிதைய
　　ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
　　சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி
　　லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாத கேதீச்சரந் தொழுதெழக்
　　கெடுமிடர் வினைதானே.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
　　ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர் பாடுவ
　　ரகந்தொறு மிடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதோர் இச்சையின் உழல்பவர்
　　உயர்தரு மாதோட்டத்து
அணணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு
　　அருவினை அடையாவே.

பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர்
　　விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
　　மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித் திருந்தகே தீச்சரம்
　　பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
　　மொய்த்தெழும் வினைபோமே.

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
　　மடைந்தவர்க் கருளீய
வல்லவர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
　　மலிகடல் மாதோட்டத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்து
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்குமா
தோட்டநன் நகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே.

மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் மாதோட்டத்து
ஆட லேறுடை யண்ணல்கே தீச்சரத்து
அடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
 நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
 வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
 அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
 கோணமா மலையமர்ந் தாரே

கடிதென வந்த கரிதனை யுரித்து
 அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
 பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
 கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
 கோணமா மலையமர்ந் தாரே

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
 படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
 மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
 தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
 கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய ளொடுமுட னாகித்
துன்றுமொண் பெளவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்ற செந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொழிந்தே

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

*(தந்தையார் யாகஞ்செய்யப் பணங்கேட்டபோது இறைவனை வேண்டி உலவாக்கிழி பெற்றுக்கொடுத்தபோது பாடப்பெற்றது.)*

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் மறிவார் சொலக் கேட்டு மன்றே.

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூத னொலி மாலை யென்றே கலிக்கோவை சொல்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே.

மாலாய வனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே.

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே.

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
எல்லார்களும் பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே.

திருச்சிற்றம்பலம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார்
அருளிச் செய்த
# தேவாரம்
## நான்காந் திருமுறை

**திருவதிகை** **வீரட்டானம்** **கொல்லி**

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போது மிருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

*(சமணசமயத்திற் சேர்ந்திருந்த மருணீக்கியாரைப் பீடித்திருந்த சூலை நோய மருந்தினாலும் மந்திரத்தினாலும் தீராது. இத் திருப்பதிகம் பாடத் தீர்ந்தது. இதனைப் பத்தி சிரத்தையுடன் ஓதுபவர்கள் தமக்கு ஏற்படும் வயிற்றுவலி நீக்கிக் குணமடைகிறார்கள்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணித்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வர்
துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை கொண்டு
அணிந்தீரடி கேள்அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

முன்னம்அடி யேன்அறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடியேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளர்
தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் .என்னாவில் மறந்தறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தேஉம்க் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப்புரட் டிஅறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை யினித்தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்
அன்பேஅமை யும்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்கா டரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தான் அரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்.

**பொது திருவங்கமாலை சாதாரி**

திருச்சிற்றம்பலம்.

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

*("செல்கதி காட்டிடப் போற்றும் திரு அங்கமாலை" என்று சிறப்பிக்கப் பெற்றுள்ள இத்திருப்பதிகத்தைப் படனஞ் செய்பவர் பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவார்கள்.)*

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்.

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய்

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பயனென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்கு
உற்றா ராருளரோ

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்
திருச்சிற்றம்பலம்.

**பொது நமச்சிவாயத் திருப்பதிகம் காந்தார பஞ்சம்**

நாலாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

*அமணர் சொற்கேட்ட பல்லவ அரசன் மருணீக்கியாரைக் கல்லுடன்கட்டி கடலில் பாய்ச்சப் பணித்தான். அப்போது அவர் திருவைந் தெழுத்தை துதிப்பவராய் இத்திருப்பதிகத்தை பாட அக்கல்லே தெப்பமாகத் திருப்பாதிரிப் புலியூரில் கரையேறினார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில நாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது.
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயயே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேச ரணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்

**பொது ஐந்தாம் திருமுறை தனிக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளா னார்க்கா ளானாரை யடைந்துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே.

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே.

*(பல்லவ அரசனின் கட்டளைப்படி சமணர்களால் நீற்றறையில் விட்டுப் பூட்டப் பெற்ற மருணீக்கியார் சிவபிரானுடைய திருவடிநிழலைத் தலைக்கொண்டு இத்திருப்பதிகத்தைப் பாடினார். அந்நீற்றறை வீணா கானமும், சந்திரனும், தென்றலும், இளவேனிலும், பொய்கையும் போலக் குளிர்ந்தது.)*

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையும் சூழ்ந்துகொண்டு
உழுத சால்வழி யேயுழு வான்பொருட்டு
இழுதை நெஞ்சமி தென்படு கின்றதே.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுகளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில் ஆறாந் திருமுறை பெரியதிருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

**திருவதிகை வீரட்டானம் போற்றித்திருத்தாண்டகம்**

எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங்கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவதிகை வீரட்டானம் (திருவடிகள்)

## திருவடித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
அருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழுது சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணா மடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும் மடி
திரைவிரவு தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.

கொடுவினையா ரென்றுங் குறுகா வடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் மடி
படுமுழவம் பாணி பயிற்றும் மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த வடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருதும் மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தா னடி
நிறைகெடில வீரட்டம் நீங்கா வடி.

வைதெழுவார் காமம்பொய் போகா வடி
வஞ்ச வலைப்பாடொன் றில்லா வடி
கைதொழுது நாமேத்திக் காணும் மடி
கணக்கு வழக்கைக் கடந்த வடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும் மடி
நீள்விசும்பை ஊடறுத்து நின்ற வடி
தெய்வப் புனற்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாயனார் இத்திருத்தலத்தில் திருத்தொண்டியற்றும் நாள்களில், திருவடிட் பெருமையை விளக்கும் இத்திருவடித் திருத்தாண்டகத்தைத் தம் உளத்து மீதூர்ந்த பேரன்பினால் அருளிச் செய்தார்.*

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் மடி
அழகெழுத லாகா அருட்சே வடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த வடி
சோமனையும் காலனையுங் காய்ந்த வடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல வடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.

ஒருகாலத் தொன்றாகி நின்ற வடி
ஊழிதோ றூழி உயர்ந்த வடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் மடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல வடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும் மடி
இன்புற்றார் இட்டபூ ஏறும் மடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.

திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவ் வடி
உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வா வடி
உருவென் றுணரப் படாத வடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைமாலை யெல்லா முடைய வடி
உரையா லுணரப் படாத வடி
வரைமாதை வாடாமை வைக்கும் மடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும் மடி
அரைமாத் திரையி லடங்கும் மடி
அகலம் அளக்கிற்பா ரில்லா வடி
கரைமாங் கலிக்கெடில நாடன் னடி
கமழ்வீரட் டானக் காபாலி யடி

நறுமலராய் நாறும் மலர்ச்சே வடி
நடுவா யுலக நாடாய வடி
செறிகதிருந் திங்களுமாய் நின்ற வடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்த வடி
மறுமதியை மாசு கழுவும் மடி
மந்திரமுந் தந்திரமும் ஆய வடி
செறிகெடில நாடர் பெருமா னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
அடியார்கட் காரமுத மாயவடி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல வடி
பற்றற்றார் பற்றும் பவள வடி
மணியடி பொன்னடி மாண்பா மடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல வடி
தணிபாடு தண்கெடில நாடன் னடி
தகைசார் வீரட்டத் தலைவன் னடி.

அந்தா மரைப்போ தலர்ந்தவ் வடி
அரக்கனையும் ஆற்ற லழித்தவ் வடி
முந்தாகி முன்னே முளைத்தவ் வடி
முழங்கழலாய் நீண்டஎம் மூர்த்தி யடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தாடு மெல்விரலாள் பாகன் னடி
பவளத் தடவரையே போல்வா னடி
வெந்தார் சுடலைநீ றாடும் மடி
வீரட்டங் காதல் விமலன் னடி.

திருச்சிற்றம்பலம்.

**திருக்காளத்தி** **திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யான் அவனென் கண்ணு ளானே.

**திருநல்லூர்** **திருத்தாண்டகம்**

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தாம் முளையாகும் வேரே தானாம்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமு மாம்பரஞ் சோதி தானாம்
தொத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றாதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணா காட்டுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே.

**திருப்பூவணம் திருத்தாண்டகம்**

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

**திருஆலவாய் திருத்தாண்டகம்**

முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாயச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாயச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

**திருநள்ளாறு** **திருத்தாண்டகம்**

குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பாலானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
இராவணனை யிருபதுதோள் நெரிய வூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
உற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை
மறவாதார் மனத்தென்றும் மன்னி னானை
மாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறுவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

திருவாரூர் திருத்தாண்டகம்

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறாது ஆன்ஏறு ஏறி
அமரர்நா டாளாதே ஆரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவாவண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட் டேனே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்ககும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

**திருவாரூர்** **திருத்தாண்டகம்**

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்கு
இல்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்நல் ஆரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்.
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே.

திருவாரூர் திருத்தாண்டவம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்க ளுண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

வங்கமலி கடல் நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இத்திருப்பதிகத்தில் 108 முறை "போற்றி" பயின்று வருவதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. இது தினமும் திருவாரூர்த் தியாகேசர் சந்நிதியில் பூசைக்காலத்தில் ஓதப் பெறுவது. போற்றி - வணக்கம்*

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் கணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

பிரமன்தன் சிரமரித்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தானுஞ்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

**திருவையாறு** **திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

**திருநெய்த்தானம்** **திருத்தாண்டகம்**

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

**திருப்பூந்துருத்தி** **திருத்தாண்டகம்**

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாம் கற்பித் தானைக்
காணா தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே.

மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச செஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
மேற்றான்நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே.

நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
நாடோறும் நின்கழலே யேத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்றா லென்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒலிதிரைநீர்க் கடல்நஞ்சுண் டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

**திருக்கயிலாயம் அருச்சனை போற்றித்திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி.
கயிலை மலையானே போற்றி போற்றி

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

*நாயனார் கயிலை செல்லும் ஆர்வம் கொண்டு செல்லுகையில் பல துன்பங்களை அடைந்திருந்த நிலையில் எதிரே ஒரு முனிவராகத் தோன்றிய இறைவரிடம் " ஆளும் நாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்றார். நாயனாரது மன உறுதியைக் கண்ட இறைவர் "இப் பொய்கையில் மூழ்கி நம்மை நீ கயிலையிலிருந்த அம்முறையைத் திருவையாற்றில் காண்" என்றார். நாயனாரும் அவ்வண்ணம் மூழ்கி திருவையாற்றில் ஒரு வாவியில் எழுந்து. வள்ளலார் கயிலையிலிருந்த கோலங் கண்டு தொழுது பாடியருளியன. இது முதல் மூன்று திருப்பதிகங்கள் கயிலைமலையானையே போற்றியருளியதால் இம்மூன்றும் கயிலைத் திருப்பதிகங்களாயின. இவற்றுள் பலவிடத்தும் இறைவன் தமது சிந்தையின்கண் நின்றமையை வலியுறுத்தியது. கயிலைபோல, உடம்பிற் கயிலை உள்ளம் என்பது உணர்த்துதற் பொருட்டேயாம். இது சிவ அர்ச்சனைக்குந்த பதிகம்.*

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போ்ற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

நெடியவிசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக் கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின் சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்கா தென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரின் திகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மைசேர்ந்த கண்டமிடற்றாய் போற்றி
மாலுக்கும் ஓராழி யீந்தாய் போற்றி
பொய் சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடீ போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசேர ரனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமையே ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோர்விண் ணேத்தப் படுவாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி
தொழில்நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடி தாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர்மெய் பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி
என்றும்மீ ளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வமுடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெல்லாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
ஏழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
ஏசுமா முண்டி யுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

எண்மேலும் எண்ண முடையாய் போற்றி
ஏற்றிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடி யாழ்வீணை பயின்றாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொான் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

முடியார்சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தீ போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவன் : பரமசிவன்** **இறைவி : பார்வதியம்மை**

**திருக்கன்றாப்பூர்** **திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

**திருவானைக்கா** **திருத்தாண்டகம்**

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே.

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவுங் காட்டா நின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே.

**திருவாய்மூர்** **திருத்தாண்டகம்**

பாடஅடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல் கண்டேன் கங்கை யாளைக்
கோட லரவார் சடையீற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே.

**திருவாலங்காடு** **திருத்தாண்டகம்**

அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
அந்தியுஞ் சந்தியு மானார் தாமே
சொல்லும் பொருளெலா மானார் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மானார் தாமே
பல்லுரைக்கும் பாவவெலா மானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுறைஞ் செல்வர் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாலங்காடு திருத்தாண்டகம்

ஒன்றா வுலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே
கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே
திருவாலங் காடுறையும் செல்வர் தாமே

## திருமறைக்காடு திருத்தாண்டகம்

மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.
திருச்சிற்றம்பலம்.

## திருச்சிவபுரம் திருத்தாண்டகம்

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானவன்காண் காவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே.

**பொது** **திருத்தாண்டகம்**

தந்தையார் தாயார் உடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

திருச்சிற்றம்பலம்.

**பொது திருச்சிற்றம்பலம் நின்ற திருத்தாண்டகம்**

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணு மாகிப்
பிரளயத்துக் கப்பால் ஓர் அண்ட மாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்து மாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே.

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய் கால்ஆறாய்க் கழியு மாகிக்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றும் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே.

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பின் உச்சி யாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே.

தீயாகி நீராகித் திண்மை யாகி
திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகி
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறும் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ் சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமாய் ஆதியாய் வேத மாகி
அருமறையோடு ஐம்பூதம் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகி
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழிவு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே.

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித் தோலாடைக் குழக னாகி
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மென்நினைந்தார்க்கு எளிதே யாகி
அழல்வண்ண வண்ணர்தாம் நின்ற வாறே.

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி அவியு மாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகி
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாகி நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய் சென்றடிகள் நின்ற வாறே.

நீராகி நீள்அகலம் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பின் உச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தா னாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லஎம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ் சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே.

மாலாகி நான்முகனாய் மாபூ தமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி எண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலாதன் வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ் சுடராய் எம்மடிகள் நின்ற வாறே.

திருச்சிற்றம்பலம்.

**பொது** **தனித்திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்.

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி
அனலாடி ஆன்அஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ் சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங்கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங்கடவு ளானே.

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப்பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமம் அஞ்செழுத்தும்செப்பா ராகில்
        தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
        உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
        அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
        பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்
        நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
        மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
        பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னினல்லால்
        ஏழையேன் என்சொல்லி யேத்து கேனே.

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
        அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
        எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
        பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோஐய ஐயோ
        எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
        குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
        நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே.

திருச்சிற்றம்பலம்.

**பொது** **வினாவிடைத் திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன்ஓ ருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாயக்
கொய்ம்மலர்ச்சசே வடியிணையே குறுகி னோமே.

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே

திருப்புகலூர் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல்வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமே பூண்டாய் அனலாடி னாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடையி னாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய தேவ தேவே

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவறுத் தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்டிங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாறேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டனங்கற் காய்ந்தானே பாவ நாசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
கார்வார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கட வுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறையுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
அக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுத்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

ஆறாந்திருமுறைமுற்றுப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார்
அருளிச் செய்த
# தேவாரம்
## ஏழாந் திருமுறை

**திருவெண்ணெய்நல்லூர்** **இந்தளம்**

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அன்னேஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூருட் டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன்என லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியாய்
ஆதன்பொரு ளானேன்அறி வில்லேன் அரு·ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அண்ணாஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

ஊனாய்உயி ரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

ஏற்றார்புரம் மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வான்நீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாவுனக் காளாய்இனி அல்லேன்என லாமே.

மழுவாள்வலன் ஏந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அழகாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.

காரூர்புக லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.

திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கலயநல்லூர்** **தக்கராகம்**

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலன்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர்காணே.

**திருக்கோளிலி** **நட்டராகம்**

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையுர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

**திருக்கழிப்பாலை** **நட்டராகம்**

எங்கே னும்மிருந் துன்னடி யேன்உ னைநினைந்தால்
அங்கே வந்தென்னொடும் முட னாகி நின்றருளி
இங்கே என்வினையை யறுத்திட்டெ னையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

**திருமழபாடி** **நட்டராகம்**

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

**திருக்குருகாவூர்வெள்ளடை** **நட்டராகம்**

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

**திருக்கோடிக்குழகர்** **கொல்லி**

கடிதாய்க்கடற் காற்றுவந் தெற்றக் கரைமேல்
குடிதான்அய லேஇருந் தாற்குற்ற மாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையா இருந்தீரே

**திருப்புகலூர்** **கொல்லி**

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

**திருவதிகைவீரட்டானம்** **கொல்லிக்கௌவாணம்**

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்து
அம்மான்தன் அடிக்கொண்டேன் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கலயநல்லூர் **தக்கராகம்**

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலன்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர்காணே.

**திருக்கோளிலி** **நட்டராகம்**

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையுர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

**திருக்கழிப்பாலை** **நட்டராகம்**

எங்கே னும்மிருந் துன்னடி யேன்உ னைநினைந்தால்
அங்கே வந்தென்னொடும் முட னாகி நின்றருளி
இங்கே என்வினையை யறுத்திட்டெ னையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.

**திருமழபாடி** **நட்டராகம்**

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

**திருக்குருகாவூர்வெள்ளடை** **நட்டராகம்**

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநல் விடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

**திருக்கோடிக்குழகர்** **கொல்லி**

கடிதாய்க்கடற் காற்றுவந் தெற்றக் கரைமேல்
குடிதான்அய லேஇருந் தாற்குற்ற மாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையா இருந்தீரே

**திருப்புகலூர்** **கொல்லி**

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

**திருவதிகைவீரட்டானம்** **கொல்லிக்கௌவாணம்**

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மான்தன் அடிக்கொண்டேன் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே.

திருச்சிற்றம்பலம்..

**திருவாரூர் திருத்தொண்டத்தொகை கொல்லிக்கௌவாணம்**

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு வப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே

திருச்சிற்றம்பலம்

**திருநாகைக்காரோணம்** **கொல்லிக்கெளவாணம்**

திருச்சிற்றம்பலம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையாரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவவறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரிகமழ் சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்த்தொகை பழம்பஞ்சுரம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டு ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே.

திருப்பாண்டிக்கொடுமுடி பழம்பஞ்சுரம்

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை என்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்போகும் நாள்உயர் பாடைமேல்
காவு நாள்இவை என்றலாற்கரு தேன்கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை தம்பி ரான்என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந் திழி காவிரி யதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாநா நமச்சி வாயவே
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள் நல்கினாய்க்கழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

ஏடு வான்இளந் திங்கள் சூடினை என்பின் கொல்புலித்தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்தாடு பாண்டிக்கொடுமுடி
விரும்பனேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

செம்போ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

சாரணன்தந்தை எம்பி ரான்எந்தை தம்பி ரான் என்பொன் மாமணீயென்று
பேரெ ணாயிர கோடி தேவர் பிதற்றி நின்ற பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.

கோணிய பிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லுவார்க்கில்லை
துன்பமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கேதீச்சரம்** **நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யாணையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளோடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கம்மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம்செய்த மடவாளோடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளோடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத் தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்

**திருக்கழுக்குன்றம் அருச்சனை நட்டபாடை**

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையான் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே.

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும் எட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையுந் தண்கழுக் குன்றமே

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்கு மழுவா ளன்முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்மதம் மூன்றுடைக்
களறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைகள் உண்டு தழுவிக் குட்டி யொடுமுசுக்
கலைகள் பாயும் புறவில் தண்கழுக் குன்றமே.

மடமு டைய அடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய அரவன் றான்பயி லும்மிடம்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே.

ஊன மில்லா அடியார் நம்மனத் தேஉற
ஞான மூர்த்தி நட்ட மாடிநவி லும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடவே
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்றமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தம் இல்லா அடியார் நம்மனத் தேஉற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
சந்தம் நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே.

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
கழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே.

பல்லின் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடம்
கல்லின் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவாரைத் தொழு மின்களே.

திருச்சிற்றம்பலம்

**திருவாரூர்** **புறநீர்மை**

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலரிட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றன் மணங்கமழுந் தென்திரு வாரூர்புக்
கென்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே

**திருக்கூடலையாற்றூர்** **புறநீர்மை**

வடியுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர்என்றானே.

இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணம்என்பேன
நடையுடையன் நம்மடியான் என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்தோல்
உடையுடையான் எனையுடையான் உளோம் போகீர் என்றானே.

செய்வினையொன் றறியாதேன் திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தா யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லன் உளோம் போகீர் என்றானே.

**கோயில்** **குறிஞ்சி**

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழுநாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரிஅகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே.

**கோயில்** **குறிஞ்சி**

பாரூரும் அரவல்குல் உமைநங்கை யவள்பங்கன்
பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனார் தமர்செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில்
அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே
பெற்றா மன்றே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே.

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரு ரகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே.

துருத்தி யுறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே யெனவேண்டா
அருத்தியுடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்து போதீரே.

*நம்பியாரூரர் திருக்காஞ்சியில் இடக்கண் பெற்று பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்று சேர்ந்தார். திருக்கோயிலினுட் சென்றபோது இறைவனை வணங்க ஒரு கண் போதாமையால் வருந்தினார். அப்போ இத்திருப்பதிகத்தைப் பாட வலக்கண்ணையும் பெற்றார் இதனை ஓதுபவர் கண்ணைப் பொறுத்த எவ்வகை நோயும் நீங்கப் பெறுவார்.

செந்தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே.

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா றுமக்க பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே.

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே.

பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே.

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானெனை முன்படைத்தான் அத றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த யானை அருள் புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே

ஆனை உரித்தபகை அடி யேனொடு மீளக் கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளி யானை நினைத்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ் செய்தெனை யேறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித் தான் மலை உத்தமனே.

மந்திரம் ஒன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரி சேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில் அழ கானை யருள் புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித் தான்மலை உத்தமனே

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தவென்னை அது மாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித் தான்மலை உத்தமனே

மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னு லகம்பெறுதல் தொண்ட னேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித் தான் மலை உத்தமனே.

அஞ்சினை ஒன்றிநின்று அலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே வைகி வானநன் னாடர் முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்ட னேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித் தான் மலை உத்தமனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகெட விண்ணதிர நிலம் எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழி யேவரு வேனெதிரே
அலை கடலால் அரையன் அலர் கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித் தான்மலை உத்தமனே.

அரவொலி ஆகமங்கள் அறி வார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெ லாம்வந் தெதிர்ந் திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித் தான்மலை உத்தமனே.

இந்திரன் மால்பிரமன் னெழி லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்த யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித் தான் மலை உத்தமனே.

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன் நொடித்தான் மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை நாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சை யப்பர்க் கறிவிப்பதே

திருச்சிற்றம்பலம்

**திருவாலங்காடு** **பழம்பஞ்சுரம்**

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடா உன்னடியார்க் கடியேன் ஆவேனே.

திருச்சிற்றம்பலம்

*ஏழாந்திருமுறை முற்றுப்பெற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

**மாணிக்கவாசக சுவாமிகள்**

அருளிச் செய்த

# திருவாசகம்,திருக்கோவையார்

எட்டாந் திருமுறை

திருவாசகம்

## 1.சிவபுராணம்

**திருப்பெருந்துறையில் அருளியது**

(சிவனது அநாதி முறைமையான பழைமை)

**கலிவெண்பா**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந் தோல்போர்த்து, எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங் கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெளம் மையா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## 2. கீர்த்தி திருவகவல்

திருத்தில்லையில் அருளியது
(சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை)
**(நிலைமண்டில ஆசிரியப்பா)**

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியு மழித்தும்

என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னோடும்
எஞ்சா தீண்டு மின்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை உய்யக்

கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதிர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்று
ஈண்டு கனக மிசையப் பெறாஅது
ஆண்டா னெங்கோர் அருள்வழி யிருப்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண்டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவகனாகிய கொள்கையும்

ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்தினிது அருளித்

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல் வனாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம் பெறவைத்து
நன்னீர்ச் சேவக னாகிய தன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்

குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்கு
அட்டமா சித்தி யருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட இருந்தும்

தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனி லீண்ட விருந்து

படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து,
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னி லிடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையிலெழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்

துருத்தி தன்னி லருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல அருளியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண்டு
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்

தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

அந்தமில் பெருமை அருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்

ஆனந் தம்மே யாறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

அப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்

ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதா ரெரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

நாத நாத என்றழு தரற்றிப்
பாதம் எய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்று
இதஞ்சலிப் பெய்த நின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வா யுமையோடு காளிக்கு
அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவ னீண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

## 3. திருவண்டப் பகுதி
## திருத்தில்லையில் அருளியது

(சிவனது தூல சூக்குமத்தை வியந்தது)

**இணைக் குறளாசிரியப்பா**

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னுப் புரையச்

சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து

எறியது வளியிற்
கொட்கம் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடோறும்
அருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு

மதியிற் றண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழல்திகழ்
நீரி னின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட

மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்று
எனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க

ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க

அன்னதொன் றவ்வியி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற் பதங்கடந்த தொல்லோன் காண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையி லையோன் காண்க

இணைப்பரும் பெருமையி லீசன் காண்க
அரியதி லரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலோடு கீழாய் விரிந்தோன் காண்க

அந்தமு மாதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க

தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க

புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண்டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானு முடனே காண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய

வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெரும் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட

எஞ்சா வின்னருள் நுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டங் கையற ஓங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்

தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப் பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்து

ஊழு ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்து
உருவ அருள்நீர் ஒட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க

எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி, நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடா அய்
நிற்பன நிறீஇச்

சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படா அன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவினாற்றம் போன்றுயர்ந் தெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்

திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்

இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்

ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்தும்

தன்னே ரில்லோன் றானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்டு

அலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருவுளங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்

ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்று
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்

ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கிலலேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்

தேக்கிடச்செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவது.

உள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்கு
அள்ளு றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்தேன் கலக்க

அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. போற்றித் திருவகல்

## திருத்தில்லையில் அருளியது

(சகத்தின் உற்பத்தி)

### நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியு மாதர வதனிற்

கடுமுரண் ஏன மாகி முன்கலந்து
ஏழ்தல முருவ இடந்து பின்னெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்

இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களின் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடடைப் பிழைத்துங்

ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்.
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தா அர்த்து

உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்த சலியாத்
தழலது கண்ட மெழுகது போல

தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்து
ஆடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கேணுத லின்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரம அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து

குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியாது அத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

கூட லிலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றெனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

கடையே னடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகடலுலகின் விளைவே போற்றி

அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம்அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பாராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப் பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி

குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருள்ளைக் கருளினை பொற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங் கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
சுவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலை நாடுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி

செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

திருச்சிற்றம்பலம்

## திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கிழமே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதல் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையி னேற்கே

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாம் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன்றறியேனே

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி

**நீத்தல் விண்ணப்பம்**

கடையவ னெனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாயிவிறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது

(சத்தியை வியந்தது)

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றளஞூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட் கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் படாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோரும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
எழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பெங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய்

உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ்சொற்புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங்காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கேழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்குமீறாம் இணையடிகள்
போற்றிமால்நான்முகனுங்காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவம்மானை

(ஆனந்தக்களிப்பு)

திருச்சிற்றம்பலம

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்துகனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மனாய்

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பொற்சுண்ணம்

(ஆனந்த மனோலயம்)

**திருத்தில்லையில் அருளியது**

முத்துநல் தாமம்பூ மலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியார்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெள்ளியைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கன் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடி
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

தேனக மாமலர் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசென் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோத்தும்பி

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செவ்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசும்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கொத்தும்பீ

## திருத்தெள்ளேணம்

திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறிவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ

## திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பூவல்லி

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ

எந்தையெந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம்அறுத் தென்னை ஆட்கொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டான்என் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமே

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

## திருத்தோணோக்கம்

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவாறு
எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொன்னூசல்

## அருட்சுத்தி

(திருத்தில்லையில் அருளியது)

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித் தீமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங்கு இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ.

முன்னீறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக்கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ.

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெங்குலவுசோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

திருச்சிற்றம்பலம்

## அன்னைப்பத்து

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும்.

## குயிற்பத்து

கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்துநின்ற தொன்மை
ஆதி குணமொன்றுமில்லான் அந்தமி லான்வரக் கூவாய்.

ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலிசூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பள்ளியெழுச்சி

### திரோதான சத்தி

(திருப்பெருந்துறையில் அருளியது)

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங்கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலிகூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம்உனைக் கண்ட றிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்ன
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும்காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# கோயில் மூத்த திருப்பதிகம்

## அநாதியாகிய சற்காரியம்

(திருத்தில்லையில் அருளியது)

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தான்ால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே.

முன்னின்று ஆண்டாய் எனைமுன்னம் யானும்
அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட்
டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று போந்திடு
என்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ பொன்னம்
பலக்கூத் துகந்தானே.

உகந்தா னேஅன் புடையடிமைக் குருகா
உள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால் தக்க
வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ
வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன் பொன்னம்
பலத்தெம் முழுமுதலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுத லேஜம் புலனுக்கும் மூவர்க்
கும்என் தனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்தி
ரள்வான் குழுமிக்
கெழுமுத லேஅருள் தந்திருக்க இரங்குங்
கொல்லோ என்று
அழுமது வேயன் றிமறறென் செய்கேன்
பொன்னம் பலத்தரைசே.

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே
என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி
கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப் பேசா
திருந்தால் ஏசாரோ.

ஏசா நிற்பர் என்னைஉனக் கடியான்
என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும் பேணா
நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ
லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும் எந்தாய்
இனித்தான் இரங்காயே.

இரங்கும் நமக்கம் பலக்கூத்தன் என்றென்று
ஏமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வார்
இலிமாடு ஆவேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கும் அடியார் களும்நீயும் நின்று
நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள் வாழ்வே
வாவென் றருளாயே.

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல்
என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே
பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து வருந்து
வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல் செத்தே
போனாற் சிரியாரே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு
திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறு
இருந்துஉன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா
என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி
இனித்தான் நல்காயே.

நல்கா தொழியான் நமக்கென்றுன் நாமம்
பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா
மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப்
பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய்
என்னை உடையானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் திருப்பதிகம்

## அநுபோக இலக்கணம்

(திருத்தில்லையில் அருளியது)

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே

அரைசனே அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்த மெயச்சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா வுயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே.

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய் அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்டின்றே.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருறவு எனக்கிங்கு ஆர் அய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ.

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புணர்ச்சிப்பத்து

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

## வாழாப்பத்து

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை: யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

பாவநா சாஉன் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கழுக்குன்றப் பதிகம்

### சற்குருதரிசனம்

பிணக்கிலாதபெ ருந்து றைப்பெரு மான்
உன்நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலம்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக் கேடனேன் இனி
மேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

திருச்சிற்றம்பலம்

## கண்டபத்து

### நிருத்த தரிசனம்

திருத்தில்லையில் அருளியது

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டனே.

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வன்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோரும் காணஎன்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே.

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்(கு)
அளவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே.

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

திருச்சிற்றம்பலம்

## குழைத்தபத்து

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

நாயிற் கடையாம் நாயேனை நயந்து
நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட்
டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்ன
தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் கண்ணுதலே.

## உயிருண்ணிப்பத்து

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன்மண்ணும் விண்ணும
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப் புறம்போகலொட் டேனே.

## அச்சப்பத்து

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

## பிடித்தபத்து

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவேசறவு

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடி யேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புலம்பல்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

## அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்

## திருச்சிற்றம்பலக்கோவை

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் குழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே.

ஈசற் கியான்வைத்த வன்பி னகன்றவன் வாங்கிவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை யின்னொளி போன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே.

ஆநந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயர் ஈருருக்கொண்டு
ஆநந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ் சேர்
ஆநந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆநந்த வெள்ளம்வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே.

திருச்சிற்றம்பலம்

**எட்டாந் திருமுறை முற்றுப்பெற்றது.**

## திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசகர் வழிபாடு

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத்து என்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேல் ஏறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாந் திருமுறை
# திருவிசைப்பா
## திருமாளிகைத் தேவர் அருளிச் செய்தது

**கோயில்** **பஞ்சமம்**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ !
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## சேந்தனார் அருளிச் செய்தது

**திருவீழிமிழலை** **பஞ்சமம்**

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## கருவூர்த்தேவர் அருளிச் செய்தது

**திரைலோக்கியசுந்தரம்** **காந்தாரம்**

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## கருவூர்த்தேவர் அருளிச் செய்தது

**கங்கைகொண்ட சோளேச்சரம்** **பஞ்சமம்**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதத் தெய்வம் இதனின் மற் றுண்டே?
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கொண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

**தஞ்சை இராசராசேச்சரம்** **பஞ்சமம்**

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகொலம் பொதிந்த திருவுடம் பச்சோ!
அங்ஙனே அழகிதோ; அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

## பூந்துருத்திநம்பிகாட நம்பி அருளிச் செய்தது

**திருவாரூர்** **பஞ்சமம்**

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில்** **சாளரபாணி (ஆனந்தபைரவி)**

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடையேறி! கூத்தா டரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே.

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு

## சேந்தனார் அருளிச் செய்தது

**கோயில்** **பஞ்சமம்**

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டுகூறுதுமே.

சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

ஒன்பதாந்திருமுறை முற்றுப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலநாயனார் அருளிய
# திருமந்திரம்

(1)

நடுவுநின்றார்க்கன்றி ஞானமுமில்லை
நடுவுநின்றார்க்கு நரகமுமில்லை
நடுவுநின்றார்நல்ல தேவருமாவார்
நடுவுநின்றார்வழி நானுநின்றேன்

(2)

அன்புஞ்சிவமு மிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாரு மறிகிலார்
அன்பேசிவமாவதா ருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந் திருப்பாரே

(3)

சிவனோ டொக்குந் தெய்வந் தேடினுமில்லை
யவனோ டொப்பாரிங் கியாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரை யானே

(4)

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயறுகு
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5)

அரகர வென்ன வரியதொன் றில்லை
யரகர வென்ன வறிகிலர் மாந்த
ரரகர வென்ன வமரரு மாவ
ரரகர வென்ன வறும்பிறப் பன்றே

(6)

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்விரே

(7)

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் தரியதோர் பேறிழத் தாரே

(8)

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

(9)

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை யங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தர்செய் தீசன் அருள்பெற லாமே.

(10)

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே.

(11)

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரானென்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரானென்று
நாடுவன் நானின் றறிவது தானே.

(12)

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

(13)

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவு கின்றாரே

(14)

படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே

(15)

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறு மின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆகுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராந் திருமுறை

திருவாக்குஞ் செய்கருமங்கை கூட்டுஞ்செஞ்சொற்
பெருவாக்கும்பீடும் பெருக்கு - முருவாக்கு
மாதலால்வானோருமானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங்கை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்குமண்ணிற்கு நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனித்து

உன்னையொழியவொரு வரையுநம்புகிலேன்
பின்னையொருவரையான்பின் செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பாவானோர் கொடியவினைதீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே

முருகனேசெந்தி முதல்வனேமாயோன்
மருகனேயீசன்மகனே யொருகைமுகன்
றம்பியேநின்னுடைய தண்டைக்காலெப்பொழுதும்
நம்பியேகை தொழுவேனான்

சிந்தனை செய்ய மனமமைத்
தேன் செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்
தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்மெய் யரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற்
கிவையான் விதித்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா நகரம் புகினுந்
துறக்கினும் போந்து புக்கிங்
குய்யா வுடம்பினோ டூர்வ
நடப்ப பறப்பவென்று
நையா விளியினு நானில
மாளினு நான்மறைசேர்
மையார் மிடற்ற னடிமற
வாவரம் வேண்டுவனே.

## பட்டினத்துப் பிள்ளையார் அருளிச்செய்த
### கோயில் நான்மணிமாலை

நானே பிறந்து பயன்படைத் தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

## பட்டினத்துப்பிள்ளையார் அருளிச் செய்த
### திருவிடைமருதூர் மும்மணிக் கோவை

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன் அம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில் லார்இப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கடவார்பொன் அலர்ந்தகொன்றைத்
தழையார் இடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே.

## நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த
### கோயில் திருப்பணியார் விருத்தம்

புண்ணிய னேஎன்று போற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொலாம்புகல் என்னுள்வந்திட்டு
அண்ணிய னேதில்லை அம்பல வா அலர் திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே.

திருச்சிற்றம்பலம்

பதினொராந்திருமுறைமுற்றுப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்னிரண்டாந் திருமுறை**
**சேக்கிழார் நாயனார்**
அருளிச் செய்த

# பெரியபுராணம்

**என்று வழங்கும்**
## திருத்தொண்டர் புராணம்

உலகெ லாம்உ ணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்

மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம்கும் பிடப்பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம்என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர்சொரியக் கைம்மலர்உச்சிமேற்குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி! என்ன.

அண்டர் பிரானும் தொண்டர் தமக் கதிப னாக்கி "அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
"உன்னுடையநினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற்றாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்

அண்ண லேஎனை ஆண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரிஎனப் பணிந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது அடியின்கீழ் இருக்க" என்றார்

கூடுமா றருள்கொ டுத்துக் " குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமும் நீகண்டாநந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை" என்றான் பரவுவா பற்றாய் நின்றான்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சிவடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால் எற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும்
படைத்தனம் என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

சோதி முத்தின் சிவிகை சூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றாதி யார்அரு ளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்.

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகெனஉரைப்பார்.

எண்ணிலான் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தால் கண்டார்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகொலாம்.

திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாந் திருமுறை முற்றுப்பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வேலும் மயிலும் துணை

# திருப்புகழ்

## விநாயகர் துதி

இராகம் : நாட்டை                    தாளம் : ஆதி

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன        தனதான.

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன்        அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பக எனவினை        கடிதேகும்
முத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய        மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு        பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய        முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த        அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை        இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள்        பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: கேதாரம் தாளம்: ஆதி

தந்ததனத் தானதனத் தனதான
தந்ததனத் தானதனத் தனதான

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி-

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தனதான

பக்கரைவி சித்திரமணி பொற்கலணை யிட்டநடை
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு புக்கொர்தொளை
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பனஎ னக்கருள்கை மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடன்நெய்
எள்பொரிய வல்துவரை இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்
மிக்க அடி சிற்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கினச மர்த்தனெனும் அருளாழி
வேற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வேலும் மயிலும் துணை

# நூல்

இராகம் : பைரவி தாளம் : திரிபுடை

தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன- - தனதான

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷத்தொடு ரக்ஷித்தருள்வதுப் ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.திருப்பரங்குன்றம் (1-ம் திருமுறை

இராகம்: பிலஹரி தாளம் கண்டசாதி ஜம்பை

தந்தனத் தந்தத் தனதான
தந்தனத் தந்தத் தனதான

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலங் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனே
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

தந்தனந் தந்ததன தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன தனதான

மன்றலங் கொந்துமிசை தெந்தனந் தெந்தனென
வண்டினங் கண்டுதொடர் குழல்மாதர்
மண்டிடுந் தொண்டையமு துண்டுகொண் டன்புமிக
வம்பிடுந் கும்பகன தனமார்பில்
ஒன்றஅக் பொன்றுவிழி கன்றஅங் கங்குழைய
உந்தியென் கின்றமடு விழுவேனை
உன்சிலம் புங்கனக தண்டையுங் கிண்கிணியும்
ஒண்கடம் பும்புனையும் அடிசேராய்
பன்றியங் கொம்புகம டம்புயங் கஞ்சுரர்கள்
பண்டைஎன் பங்கமணி பவர்சேயே
பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந் தைந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா
சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண் கொண்டுவளர்
செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை
திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருச்செந்தூர் (2ம் திருமுறை)

இராகம்: ரீதிகௌள                    தாளம்: கண்டசாதி திரிபுடை

தனதன்ன தனன தந்தத் தனதான
தனதனன தனன தந்தத் தனதான

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே
மயில்தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை அனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே

இராகம்: ஆனந்தபைரவி                    தாளம் : ஆதி

தந்த தனன தனனா தனனதன
தந்த தனனா தனனா தனனதன
தந்த தனன தனனா தனனதன தனதான

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளைய இதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்
தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி
வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி
மங்கை அழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தை வருக ரகுநா யக-வருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னோடுகோ சலைபுகல வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவ மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா
திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி நகரி லிஜனிதே மருவிவளர்
பெருமாளே.

## 3. திருவாவினன்குடி (பழநி) (3-ம் திருமுறை)

இராகம்: சக்கரவாகம் தாளம்: கண்டசாதி ஜம்பை

தனதான தந்தனத் தனதான
தனதான தந்தனத் தனதான

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்றனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: கரகரப்பிரியா தாளம் : கண்டசாப்பு

தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன தனதான

கிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி னும்பகர்செய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின்
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலும்
அடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ ஒன்றுமரி
ரகுராமர் சிந்தை மகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே
தேவயானை அங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

7

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி (திஸ்ரநடை)

தனன தனன தன்ன தனன
தனன தன்ன தனதான

தமரு மமரு மனையு மினிய
தனமு மரசும் அயலாகத்
தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமல விமல நடன உபய
கனக மணிகொள் இருபாதம்
கருத அருளி எனது தனிமை
கழிய அறிவு தரவேணும்
குமர சமர புரியின் முருக
குலவு பழநி மலையோனே
கொடிய பகடு முடிய மூடுக
குறவர் சிறுமி மணவாளா
அமர ரிடரும் அவுண ருடலும்
அழிய அமர்செய் தருள்வோனே
அறமு நிறமும் அயிலு மியலும்
அழகு முடைய பெருமாளே.

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: சதுரசாதி அடதாளம்
தனன தனன தனன தனன
தனன தனன தனதான

திமிர உததி யனைய நகர
செனன மதனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியும் அணுகாதே
அமரர் வடிவு மதிக குலமு
மறிவு நிறையும் வரவேநின்
அருள தருளி எனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்
சமர முகவெ லசுரர் தமது
தலைக ளுருள மிகவேநீள்
சலதி அலற நெடிய பதலை
தகர அயிலை விடுவோனே
வெமர வணையி லினிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழநி
விரவும் அமரர் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: சரசுவதி தாளம்: ஆதி

தனனா தனனா தனதான
தனனா தனனா தனதான

வரதா மணிநீ எனவோரில்
வருகா தெதுதான் அதில்வாரா (து)
இரதா திகளால் நவலோகம்
இடவே கரியாம் இதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூல் அறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனா புரிவாழ் பெருமாளே.

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தந்ததான

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் - என்று பூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய - தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாவெனது
ஈசவென மானமுற - என்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலும்
ஏவர்புகழ் வார்மறையும் - என்சொலாதே
நீறுபடு மாழைதிரு மேனிதிரு சூலனுழை
நீலமயில் வாகியுமை -தந்தவேளை
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும் - டங்கலேறே
சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி - அண்டகூடம்
செருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக - தம்பிரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: ஹம்ஸத்வனி தாளம்: ஆதி

தனதனன தாத்த தனதான
தனதனன தாத்த தனதான

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
இகபரசெள பாக்யம் அருள்வாயே
பசுபதிசி வாக்யம் உணர்வோனே
பழநிமலை வீற்றி ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

இராகம்: சக்கரவாகம் தாளம்: சங்கீரணசாதிஜம்பை

தனதனன தனதனன தானத் தனதான
தனதனன தனதனன தானத் தனதான

ஒரு பொழுது மிருசரண நேசத் தேவத் துணைரேனே
உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவன ணாசைப் பாடைத தவிரேனோ
துரிதமிடு திருதர்புர சூரைக் காரப் பெருமாளே
தொழுதுவழி படுமடியவர் காவற் காரப பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக்காரப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாவினன்குடி (பழநி)

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: கண்டசாப்பு

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த தனதான

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள்பல வேதெ ரிந்து மதனாலே
காரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி
அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று
அநுதினமும் நாண மின்றி அழிவேனோ
உரசுபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாளரங்கர்
உலகளவு மால்ம கிழ்ந்த மருகோனே
உபயகுல தீப வங்க விருதுகவி ராஜ சிங்க
உறைபுகலி யூரி லன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒரு பொழுது தூதுசென்று
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழநிமலை மீதில் நின்ற பெருமாளே.

## 4. திருவேரகம் (சுவாமிமலை) (4-ம் திருமுறை)

இராகம்: ஹம்ஸாநந்தி தாளம்: ஆதி

தனதன தனதன தனதான
தனதன தனதன தனதான

நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கருணைபுரி நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு வடியினி அருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவேரகம் (சுவாமிமலை)

இராகம்: அரிகாம்போதி தாளம்: மிஸ்ரசாப்பு

தான தனதன தான தனதன
தான தனதன தனதான

பாதி மதிநதி போது மணிசடை
நாத னருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனோடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி அமர்கள்
சூழ வலம்வரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

இராகம்: புன்னாகவராளி தாளம்: ஆதி

தானனத் தனந்த தனதான
தானனத் தனந்த தனதான

காமியத் தழுந்தி இளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத் திலன்பு மிகவூறி
ஓவியத் திலந்தம் அருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: கண்டசாப்பு

தனதனன தானதத்த தனதனன தானதத்த
தனதனன தானதத்த தனதான

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க - அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யாலம யக்கம் - உறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற - குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்க டப்ப - மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோக மிக்க - பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொத்து
தவிபுரிய வேணு நெய்த்த - வடிவேலா
அருணதள பாதபத்ம மநுதினமு மேதுதிக்க
அரிய தமிழ் தான ளித்த - மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேர கத்தின் - முருகோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. குன்று தோறாடல் (5-ம் திருமுறை)

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

தனனந் தனன தந்த தனதான
தனனந் தனன தந்த தனதான

அதிருங் கழல்ப ணிந்துன் அடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே
எதிரங் கொருவரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கில் உமைபாலா
பதியெங் கிலுமிருந்து விளையாடிப்
பலகுன் றிலும மர்ந்த பெருமாளே.

## திருக்கயிலை

இராகம்: ரஞ்சனி தாளம்: கண்டசாப்பு

தன தனனத் தனதான தன்தனத் தனதான

புமியதனிற் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே
சமரிலெதிர்த் தசுர்மாளத் தனியயில்விட் டருள்வோனே
நமசிவாயப் பொருளானே ரசதகிரிப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளிமலை

இராகம்: இராகமாவிகை தாளம்: ஆதி

தய்யதன தான தய்யதன தான
தய்யதன தானத் தனதான

தோடி அல்லிவிழி யாலு முல்லைநகை யாலும்
அல்லல்பட ஆசைக் கடலீயும்
அள்ளவினி தாகி நள்ளிரவு போலும்
உள்ளவினை யாரத் தனமாரும்
மோகனம் இல்லுமிளை யோரு மெல்ல அய லாக
வல்லெருமை மாயச் சமனாரும்
எள்ளியென தாவி கொள்ளை கொளு நாளில்
உய்யவொரு நீபொற் கழல்தாராய்
சுருட்டி தொல்லைமறை தேடி இல்லையெனு நாதர்
சொல்லமுப தேசக் குருநாதா
துள்ளிவிளை யாடு புள்ளியுழை மேவு
வெள்ளிவன மீதுற் றுறைவோனே
நாதநாம வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ க்கிரியை
வல்லைவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே.

## திருக்கழுக்குன்றம்

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி (திஸ்ரநடை)

தானதத்த தானதத்த தானதத்த தனதான
தானதத்த தானத்த தானதத்த தனதான

வேதவெற்பி லேபுனத்தில் மேவிநிற்கும் அபிராம
வேடுவச்சி பாதபத்ம மீதுசெச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்கு மாறிரட்டி புயநேய
ஆதரத்தொ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே
காதுமுக்ர வீரபத்ர காளிவெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலருட்சொ லுமையாள்பால்
ஓதிவைத்த தாதைகற்க ஓதுவித்த குருநாதா
ஒரெழுத்தி லாறெழுத்தை ஓதுவித்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினகிரி

இராகம்: தேஷ் தாளம்: ஆதி

தந்தனா தானனத் தனதான
தந்தனா தானனத் தனதான

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

இராகம்: சாருகேசி தாளம்: ஆதி

தனதான தனதத்த தனதான தானதத்த
தனதான தானதத்த தனதான

உருவேற வேசெபித்து ஒருகோடி யோமசித்தி
உடனாக ஆகமத்து - கந்துபேணி
உணர்வாசை யாரிடத்து மருவாமல் ஓரெழுத்தை
ஒழியாம லூதைவிட்டி - ருந்துநாளும்
தரியாத போதகத்தர் குருவாவ ரோரொருத்தர்
தருவார்கள் ஞானவித்தை - தஞ்சமாமோ
தழலாடி வீதிவட்ட மொளிபோத ஞானசித்தி
தருமாகி லாகுமத்தை - அண்டிலேனே
குருநாடி ராசரிக்கர் துரியோத னாதிவர்க்க
குடிமாள மாயமிட்டுக் - குந்திபாலர்
குலையாமல் நீதிகாட்டி எழுபாரை ஆளவிட்ட
குறளாக மாகிநெட்டை - கொண்டஆதி
மருகாபு ராரிசித்தன் மகனேவி ராவிசித்ர
மலைமேலு லாவுசித்த - அங்கைவேலா
மதுராபு ரேசர்மெய்க்க அரசாளு மாறன்வெப்பு
வளைகூனை யேநிமிர்த்த- தம்பிரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்செங்கோடு

இராகம்: கல்யாணி தாளம்:கண்டசாப்பு

தானதனத் தனதான தானதனத் தனதான

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலவகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமாளே.

## கதிர்காமம்

இராகம்: பீம்பிளாஸ் தாளம்: ஆதி

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதான

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படவசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அறுகுபிறை வாரி விரவுசடை யீசர்
அருள்செய்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத திருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: பீப்பிளாஸ் தாளம்: ஆதி

தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

## அருக்கொணாமலை (நகுலகிரி)

இராகம்: சிமேந்திரமத்திமம் தாளம்: ஆதி

தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன
தனத்த தானன தனத்த தானன தனதான

தொடுத்த வாளென விழித்த மார்முலை
அசைத்து மேகலை மறைத்து மூடிகள்
துடித்து நேர்கலை நெகிழ்த்து மாவியல் கொளுமாதர்
சுகித்த ஹாவென நகைத்து மேல்விழ
முடித்த வார்குழல விரித்து மேவிதழ்
துவர்த்த வாய்சுரு ளடக்கி மால்கொடு வழியேபோய்
படுத்து பாயலி லணைத்து மாமுலை
பிடித்து மார்பொடு மழுத்தி வாயிதழ்
கடித்து நாணம தழித்த பாவிகள் வலையாலே
பலித்து நோய்பிணி கிடத்து பாய்மிசை
வெளுத்து வாய்களு மலத்தி னாயென
பசித்து தாகமு மெடுத்தி டாவுயிர் உழல்வேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடுத்த தாடகை சினத்தை ஓர்கணை
விடுத்து யாகமும் நடத்தி யேயொரு
மிகுத்த வார்சிலை முறித்த மாயவன் மருகோனே
விதித்து ஞாலம தளித்த வேதனை
அதிர்த்து மோர்முடி கரத்தி லாயனல்
விழித்து மாரனை எரித்த தாதையார் குருநாதா
அடுத்த ஆயிர விடப்ப ணாமுடி
நடுக்க மாமலை பிளக்க வேகவ
டரக்கர் மாமுடி பதைக்க வேபொரு மயில்வீரா
அறத்தில் வாழுமை சிறக்க வேயறு
முகத்தி னோடணி குறத்தி யனையொ
டருக்கொ ணாமலை தருக்கு லாவிய பெருமாளே.

## திருகோணமலை

இராகம்: இராகமாலிகை தாளம்: கண்டசாதி திரிபுடை

தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன தனதான

(அரிகாம்போதி)

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியெ மயலூறி
மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ உழைத்தேவி டாய்படு கொடியேனைக்

(சண்முகப்பிரியா)

கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேறவே செயும் ஒருவாழ்வே
கதிக்கு நாயக உனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை அருட்பார்வை யாகவெ
கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள் தரவேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பம்பிளாஸ்)

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் தருவேளே
வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு முருகோனே

(மத்யமாவதி)

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே
நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி பெருமாளே

## 6. பழமுதிர்ச்சோலை (6ம்-திருமுறை)

இராகம்: இராகமாலிகை தாளம்: ஆதி

தனதன தான தனதன தான
தனதன தான தனதான

(செஞ்சுருட்டி)

அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்

(புன்னாகவராளி)

இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனது முனோடி வரவேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாதநாமக்கிரியை)

மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடனருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே

(சிந்துபைரவி)

செககண சேகு தகுதிமி தொதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.

இராகம்: மனோலயம் தாளம்: ஆதி

தானதன தந்த தானதன தானதன தந்த
தானதன தந்த தனதான

வாதினைய டர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபதம ணிந்து பணியேனே
ஆதியொடு மந்த மாகியந லங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து திரிவேனே
நகாமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே
சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: தோடி தாளம்: கண்டசாதி திரிபுடை

தானதன தான தந்த தனதான
தானதன தான தந்த தனதான

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு வழியோனே
சூரர்கிளை மாள வென்று கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே.

## 7.காஞ்சி (பிருதுவி) (7-ம் திருமுறை)

இராகம்: பிருந்தாவன சாரங்கா தாளம்: கண்டசாப்பு

தத்தத் தனதான தத்தத் தனதான

அற்றைக் கிரைதேடி அத்தம் திலுமாசை
பற்றித் தவியாத பற்றிப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் துளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் பெருமாளே.

## திருஆனைக்கா (அப்பு)

இராகம்: சாருகேசி தாளம்: ஆதி

தானத் தானத் தனதான
தானத் தானத் தனதான

நாடித் தேடித் தொழுவார்பால்
நானத் தாகத் . திரிவேனோ
மாடக் கூடற் பதிஞான
வாழ்வைச் சேரத் தருவாயே
பாடக் காதற் புரிவோர்க்குப்
பாதத் தேனைத் தருவோனே
ஆடற் றோகைக் கினியோனே
ஆனைக் காவிற் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவண்ணாமலை (தேயு)

இராகம்: சிந்து பைரவி தாளம்: ஆதி

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன தனதான

அமுத மூறுசொ லாகிய தோகையர்
பொருளு ளாரையெ னாணையு னாணையெ
னருகு வீடிது தானிதில் வாருமெ னுரைகூறும்
அசடு மாதர்க்கு வாதுசொல் கேடிகள்
தெருவின் மீதுகு லாவியு லாவிகள்
அவர்கள் மாயைப டாமல்கெ டாமல்நி னருள்தாராய்
குமரி காளிவ ராகிம கேஸ்வரி
கவுரி மோடிசு ராரிநி ராபரி
கொடிய சூலிசு டாரணி யாமளி மகமாயி
குறளு ருபமு ராரிச கோதரி
உலக தாரியு தாரிப ராபரி
குருப ராரிவி காரிந மோகரி அபிராமி
சமர நீலிபு ராரித னாயகி
மலைகு மாரிக பாலிந னாரணி
சலில மாரிசி வாயம னோகரி பரையோகி
சவுரி வீரிமு நீர்விட போஜனி
திகிரி மேவுகை யாளிசெ யாளொரு
சகல வேதமு மாயின தாயுமை அருள்பாலா
திமித மாடுசு ராரிநி சாசரர்
முடிக டோறுக டாவியி டேயொரு
சிலப சாசுகு ணாலிநி ணாமுண விடும்வேலா
திருவு லாவுசொ ணேசர ணாமலை
முகிலு லாவுவி மானந வோநிலை
சிகர மீதுகு லாவியு லாவிய பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. திருக்காளாத்தி (வாயு)

இராகம்: அடனா தாளம் : ஆதி

தனத்தா தத்தத் தனதான
தனத்தா தத்தத் தனதான

சிரத்தானத்திற் பணியாதே
செகத்தோர் பற்றைக் கறியாதே
வருத்தா மற்றெப் பிலதான
மலர்த்தாள் வைத்தெத் தனைஆள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா
நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே
திருக்கா ளத்திப் பேருமாளே.

## சிதம்பரம் (ஆகாசம்)

இராகம்: மாண்டு தாளம் : ஆதி

தனதன தனன தனதன தனன
தனதன தனன தனதான

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி யவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவும் அயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே
விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவீழிமிழலை

இராகம்: கானடா தாளம்: ஆதி

தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா தனதானா

எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவோ பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிருதாள் அருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ருரமேல் விடும்வேலா
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே.

## தில்லைப்பதி

இராகம்: மண்டு தாளம் : ஆதி

தனனத் தனனா தனதான
தன்னத் தனனா தனதான

இறையத் தனையோ அதுதானும்
இலையிட் டுணலேய் தருகாலம்
அறையிற் பெரிதா மலமாயை
அலையப் படுமா றினியாமோ
மறையத் தனைமா சிறைசாலை
வழியுய்த் துயர்வா னுறுதேவர்
சிறையைத் தவிரா விடும்வேலா
திலதைப் பதிவாழ் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவிநாசி

இராகம்: சகானா

தாளம்: மிஸ்ரசாப்பு

தனதானத் தனதானத் தனதானத் தனதான

இறவாமற் பிறவாமவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் தரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
அறநாலைப் பகல்வோனே அவிநாசிப் பெருமாளே.

## பேரூர்

இராகம்: காபி

தாளம்: ரூபகம்

தானாத் தனதான தானாத் தனதான

தீராப் பிணிதீர சீவாத் துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறை சேயே பாலாக் கிரிராச
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே.

## கருவூர்

இராகம்: கௌரி மனோகரி

தாளம்: கண்டசாப்பு

தனதானத் தனதான தனதானத் தனதான

மதியால்வித் தகனாகி மனதாலுத் தமனாகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே
நதியேநித் தியமேயென் நினைவேநற் பொருளாயோய்
கதியேசொற் பரவேளே கருவூரிற் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கானப்பேர்

இராகம்: பியாக் தாளம்: ஆதி

தானத்தான தனதான தானத்தான* தனதான

கோலக் காதிற் குழையாலே கோதிச்சேர்மைக் குழலாலே
ஞாலத்தாரைத் துயரேசெய் நாரிக்காசைப் படலாமோ
மேலைத்தேவர்க் கரியோனே வீரச்சேவற் கொடியோனே
காலப்பாசத் துயர்தீராய் கானப்பேரிற் பெருமாளே.

* ***கறையானைக் கிளையோனை கதிர்காமப் பெருமாளே.***

## நல்லூர்

இராகம்: லதாங்கி தாளம்: மிஸ்ரசாப்பு

தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தான தந்ததனதந்ததான

மூல முண்டகனு பூதி மந்திரப
ராப ரஞ்சுடர்கள் மூணு மண்டலஅ
தார சந்திமுக மாறு மிந்த்ரதரு வுந்தளாமேல்
மூத ரம்பலவர் பீட மற்தமுமி
லாத பந்தவொளி யாயி ரங்கிரண
மூணு மிந்துவொளிர் சோதி விண்படிக விந்துநாதம்
ஓல மென்றுபல தாள சந்தமிடு
சேவை கண்டமுதை வாரி யுண்டுலகி
ரேழு கண்டுவிளை யாடி யிந்துகதிர் அங்கிசூலம்
ஓடு மந்தகலி காலொ டுங்கநடு
தூணில் தங்கவரி ஞான வண்கயிறு
மீத ணைந்துசத கோடிசந்த்ர வொளி சந்தியாதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலி யந்தரிக பாலி சங்கரிபு
ராரி யம்பரிகு மாரி யெண்குணசு
வாமி பங்கிசிவ காமி சுந்தரியு கந்தசேயே
சூர சங்கரகு மார இந்திரச
காய அன்பருப கார சுந்தரகு
காவெ னுஞ்சுருதி ஓல மொன்றநட ணங்கொள்வேலா
சீல வெண்பொடியி டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவி லேறு மென்றுபொடி
நீறி டுங்கமல பாணி சந்த்ரமுக கந்தவேளே
தேவ ரம்பையமு தீண மங்கைதரு
மான ணைந்தபுய தீர சங்கரதி
யாகர் வந்துறைந லூர மர்ந்துவளர் தம்பிரானே.

## திருவாரூர்

இராகம்: யதுகுலகாம்போதி தாளம்: கண்டசாப்பு

தானான தனதான தானான தனதான

நீதானெத் தணையாலும் நீடுழி க்குபையாகி
மாதானத் தனமாக மாஞானக் கழல்தாராய்
வேதாமைத் துனவேளே வீராசற் குணசீலா
ஆதாரத் தொளியானே ஆரூரிற் பெருமாளே.

## வயலூர்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

தனந்த தானந் தந்தன தனதன தனதான

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகோளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் மருகபொன் வயலூரா
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் காங்கேயமூர்த்தி

இராகம்: சாவேரி தாளம்: கண்டசாபு

தனதன தானந்தன தனதன தாந்தாந்தன
தனதன தாந்தாந்தன தனதான

கமலரு சோகாம்பர முடிநடு வேய்பூங்கணை
கலகமர் வாய்தோய்ந்தம ளியின்மீது
களையற மீதூர்ந்தெழ மதனவி டாய் போம்படி
கனவிய வாரேந்தின இளநீர்தோய்ந்
தெமதுயிர் நீலாஞ்சன மதர்விழி யால்வாங்கிய
இவளுடன் மால்கூர்ந்திடும் அநுபோகம்
இனிவிட வேதாந்தப ரமசுக வீடாம்பொருள்
இதவிய பாதாம்புயம் அருள்வாயே
அமகர ஆசாம்பர அதுகர ஏகாம்பர
அதுலன நீலாம்பரம் அறியாத
அநகர நாளாங்கிதர் தமையுமை யாள்சேர்ந்தருள்
அறுமுறு சீகாஞ்சியில் உறைவோனே
விமலகி ராதாங்கணை தனகிரி தோய்காங்கெய
வெடிபடு தேவேந்திர னகர்வாழ
விரிகடல் தீமூண்டிட நிசிசரர் வேர்மாண்டிட
வினையற வேல்வாங்கிய பெருமாளே.

இராகம்: சங்கராபரணம் தாளம்: மிஸ்ரசாதிசம்பை

தான தான தனான தானத் தனதான
தான தான தனான தானத் தனதான

காதி மோதி வாதாடு நூல்கற் றிடுவோரும்
காசு தேடி ஈயாமல் வாழப் பெறுவோரும்
மாது பாகர் வாழ்வேயெ னாநெக் குருகாரும்
மாறி லாத மாகால னூர்புக் கலைவாரே
நாத ரூப மாநாத ராகத் துறைவோனே
நாக லோக மீரேழு பாருக் குரியோனே
தீதி லாத வேல்வீர சேவற் கொடியோனே
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: ஹம்சானந்தி தாளம்: கண்டசாதிசம்பை

தய்யதன தானத் தனதான

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

தானந்த தானந்தத் தனதான

நீலங்கொள் மேகத்தின் சிகிமீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் கடிநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலங்க வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: ஆபோதி தாளம்: மிஸ்ரசாப்பு

தனன தாத்தன தானா தானன
தனன தாத்தன தானா தானன
தனன தாத்தன தானா தானன தனதான

நிருத ரார்க்கொரு காலா ஜெஜய
சுரர்க ளேத்திடு வேலா ஜேஜய
நிமல னார்க்கொரு பாலா ஜேஜய விறலான
நெடிய வேற்படை யானே ஜேஜய
எனவி ராப்பகல் தானே நான்மிக
நினது தாட்டொழு மாறே தானினி உடனேதான்
தரையி னாழ்த்திரை ஏழே போலெழு
பிறவி மாக்கட லூடே நானுறு
சவலை தீர்த்துன தாளே சூடியுன் அடியார்வாழ்
சபையி னேற்றிமெய்ஞ் ஞான போதமு
மருளி யாட்கொளு மாறே தானது
தமிய னேறகுமு னேநீ மேவுவ தொருநாளே
தருவி னாட்டர சாள்வான் வேணுவி
னுருவ மாய்ப்பல நாளே தானுறு
தவசி னாற்சிவ னீபோய் வானவர் சிறைதீரச்
சகல லோக்கிய மேதா னாளுறு
மசுர பார்த்திப னோடே சேயவர்
தமரை வேற்கொடு நீறா யேபட விழமோதென்
றருள ஏற்றம ரோடே போயவ
ருறையு மாக்கிரி யோடே தானையு
மழிய வீழ்த்தெதிர் சூரோ டேயமர் அடலாகி
அமரில் வீட்டியும் வானோர் தானுறு
சிறையை மீட்டர னார்பால் மேவிய
அதிப ராக்ரம வேளூர் போயமர் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முக அருச்சனைத் திருப்புகழ்

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

தான தந்தன தானான தானன
தான தந்தன தானான தானன
தான தந்தன தானான தனதான

நாத விந்துக லாதீந மோநம
வேத மந்த்ரசொ ரூபாந மோநம
ஞான பண்டித சாமீந மோநம வெகுகோடி
ஞான சம்புகு மாராந மோநம
போக அந்தரி பாலாந மோநம
நாக பந்தம யூராந மோநம பரசூரர்
சேத தண்டவி நோதாந மோநம
கீத கிண்கிணி பாதந மோநம
தீர சம்ப்ரம வீராந மோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீந மோநம
தூய அம்பல சீலாந மோநம
தேவ குஞ்சரி பாகாந மோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவேனே
ஏழ்த லும்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம னோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூர
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி அந்தவு லாவரசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாவினன்குடி

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன தனதான

போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம பணியாவும்
பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் சாமீ நமோநம அரிதான
வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டைகொள் தாள நமோநம அழகான
மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம அருள்தாராய்
பாத கஞ்செறி சூரா திமாளவெ
கூர்மை கொண்டயி லாலே போராடியெ
பார அண்டர்கள் வானாடு சேர்தர ஆருள்வோனே
பாதி சந்திர னேசூ டும்வேணியர்
சூல சங்கர னார்கீ தநாயகர்
பார திண்புய மேசே ருசோதியர் கயிலாயர்
ஆதி சங்கர னார்பா கமாதுமை
கோல அம்பிகை மாதா மனோன்மணி
ஆயி சுந்தரி தயா னநாரணி அபிராமி
ஆவல் கொண்டுவி றாலே சிராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவைநகர்

இராகம் தாளம்:

தானன தானன தானா தனாதன
தானன தானன தானா தனாதன
தானன தானன தானா தனாதன தனதானா

சீதள வாரிஜ பாதா நமோநம
நாரத கீதவி நோதா நமோநம
சேவல் மாமயில் ப்ரீதா நமோநம மறைதேடுஞ்
சேகர மானப்ர தாபா நமோநம
ஆகம சாரசொ ரூபா நமோநம
தேவர்கள் சேனைம கீபா நமோநம கதிதோயப்
பாதக நீவுகு டாரா நமோநம
மாவசு ரேசக டோரா நமோநம
பாரினி லேஜய வீரா நமோநமமலைமாது
பார்வதி யாள்தரு பாலா நமோநம
நாவல ஞானம னோலா நமோநம
பாலாகு மாரசு வாமீ நமோநம அருள்தாராய்
போதக மாமுக னேரான சோதர
நீறணி வேணியர் நேயாப்ர பாகர
பூமக ளார்மரு கேசாம கோததி யிகல்சூர
போதக மாமறை ஞானாத யாகர
தேனவிழ் நீபந றாவாறு மார்பக
பூரண மாமதி போலாறு மாமுக முருகேசா
மாதவர் தேவர்க ளோடேமு ராரியு
மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்
மாநில மேழினு மாலான நாயக வடிவேலா
வானவ ரூரினும் வீறாகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வேசு ராதிபர் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் நாதநாமக்கிரியை தாளம்:

தான தத்தனா தானா தனாதன
தான தத்தனா தானா தனாதன
தான தத்தனா தானா தனாதன தனதான

வேத வித்தகா சாமீ நமோநம
வேல்மி குத்தமா சூரா நமோநம
வீம சக்ரயூ காளா நமோநம விந்துநாத
வீர பத்மசீர் பாதா நமோநம
நீல மிக்ககூ தாளா நமோநம
மேக மொத்தமா யூரா நமோநம விண்டிடாத
போத மொத்தபேர் போதா நமோநம
பூத மற்றுமே யானாய் நமோநம
பூர ணத்துளே வாழ்வாய் நமோநம துங்கமேவும்
பூத ரத்தெலாம் வாழ்வாய் நமோநம
ஆறி ரட்டிநீள் தோளா நமோநம
பூஷ ணத்துமா மார்பா நமோநம புண்டரீக
மீதி ருக்குநா மாதோடு சேயிதழ்
மீதி ருக்குமே ரார்மாபு லோமசை
வீர மிக்கஏழ் பேர்மாதர் நீடினம் நின்றுநாளும்
வேத வித்தகீ வீமா விரோகிணி
வீறு மிக்கமா விணா கரேமக
மேரு வுற்றுவாழ் சீரே சிவதரெ யங்கராகி
ஆதி சத்திசா மாதேவி பார்வதி
நீலி துத்தியார் நீணாக பூஷணி
ஆயி நித்தியே கோஉர மாதவி யென்றுதாமும்
ஆர்யை பெற்றசீ ராளா நமோநம
சூரை யட்டுநீள் பேரா நமோநம
ஆர ணத்தினார்வாழ்வே நமோநம தம்பிரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் மலை

இராகம்: தாளம்:

தனதன தானா தனாதன தனதன தானா தனாதன
தனதன தானா தனாதன தனதன தானா தனாதன தனதானா

சரவண ஜாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம
தருணச காயா நமோநம நருபநல் வீரா நமோநம
சமதள வூரா நமோநம சகதீச
பரமசொ ரூபா நமோநம சுரபதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி
பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம அருள்தாராய்
இரவுயு மாகா சபூமியும் மதியமும் வாழ்வா கவானவர்
எவர்களு, மீடே றவேழ்கடல் முறையோ வென்(று)
இடர்பட மாமே ருபூதர மிடிபட வேதா னிசாசரர்
இகல்கெட மாசே னைமேலயில் விடுவோனே
மரகத ஆகா ரவாயனு மிரணிய ஆகா ராவேதனும்
வசுவெனு மகா ரவீசனும் அடிபேண
மயிலுறை வாழ்வே விநாயக மலையுறை வேலா மகீரத
வனசர ராதா ரமாகிய பெருமாளே.

# சுவாமிமலை (குருமலை)

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதான

குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழக சிவசுத சிவய நமவென
குரவ னருள்குரு மணியேயென்
றமுத இமையவர் தமிர்த மிடுகட
லதென அநுதினம் உனையோதும்
அமலை அடியவர் கொடிய வினைகொடும்
அபய மிடுகுரல் அறியாயோ
திமிர எழுகட லுலக முறிபட
திசைகள் பொடிபட வருசூரர்
சிகர முடியுடல் புவியில் விழவுயிர்
திறைகொ டமர்பொரு மயில்வீரா
நமனை உயிர்கொளு மழவி னிணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா
நளின குருமலை மருவி அமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.

நாட்டமொன் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லாவுடலை யடர்ந்த சந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே.

வாதுற்ற திண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற் றெப்போதும் புகலுநெஞ்சே யிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வராது காணுங்கடைவழிக்கே.

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதங் கச்சி ஏகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லார் இணக்கமும் நின் பூஜைநேயமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே.

பொல்லா தவன்நெறி நில்லா தவன்ஐம் புலன்கள் தமை
வெல்லா தவன்கல்வி கல்லா தவன்மெய் யடியவர்பாற்
செல்லாத தவனுண்மை சொல்லா தவநின் றிருவடிக்கன்பு
இல்லாத வன்மண்ணி லேன்பிறந்தேன்கச்சி ஏகம்பனே.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை இடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக் கென் சொல்லுகேன் கச்சி ஏகம்பனே

அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுவொழிந்தாற்
சொன்ன விசாரம் பலகால் விசாரம்நல் தோகையரைப்
பன்ன விசாரம்பலகால் விசாரமிப் பாழுநெஞ்சுக்கு
என்ன விசாரம்வைத் தாயிறை வாகச்சி ஏகம்பனே.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
செல்லாப் பிழையுந்துதியாப் பிழையுந்தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொருத்தருள்வாய் கச்சி ஊகம்பனே.

உளியிட்ட கல்லையு வொப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகி லேனுயர் பொன் னெனவே
ஒளியிட்ட தாளிரண்டுள்ளே யிருத்துவ துண்மை யென்று
வெளியிட்டடைந்துவைத் தேனினி மேலொன்றும் வெண்டிலனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயும் பகைகொண்ட பெண்டியர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகையிச் செகமும்பகை
ஆயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினால்
தேயு நெஞ்சே மருதீசர்பொற் பாதஞ் சுதந்திரமே.

அஞ்சக்கரமெனுங் கோடாலி கொண்டிந்த ஐம்புலனாம்
வஞ்சகப் புலகட்டை வேரறவெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித்தேன் வளர்த்தேன் சிவ போகத்தையே.

மாதா வுடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே - நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

பொன்னாற் பிரயோசனம் பொன்படைத் தாற்குண்டப் பொன்படைத்தோன்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மையைப்போல்
உன்னாற் பிரயோசனம் வேணதெல்லாமுண் டுனைப்பணியும்
என்னாற் பிரயோசன மேதுண்டு காளத்தி யீச்சுரனே.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே- மேல் விழுந்தே
உற்ற ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டுவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகிறார் சுற்றத்தார் - பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னே னிதுவே சுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்து விட்டார்
பொன் பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்புற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே.

கையொன்றும் செய்ய விழியொன்று நாடக்கருத் தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள்வாய் வினைதீர்த்தவனே.

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையாமையு மற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனி லென்றிருப் பேனத்தனே கயிலாயத்தனே

நீறார்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்துள்ள நெக்குநெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானமுற்றானந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீர்
ஆறாய்ப் பெருகக் கிடப்பதென் றோகயி லாயத்தனே.

"ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றற் துருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல் செய்தே
ஏற்றுத் திரிந்து விட்டேனிறைவா கச்சி யேகம்பனே."

பேய்போற் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சை யெல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோலுழன்று நன் மங்கையரைத்
தாய் போற்கருதித் தமர்போலனைவர்க்குந் தாழ்வைசொல்லிச்
சேய் போலிருப்பர் கண்டீர் உண்மை ஞானந்தெளிந்தவரே."

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந்தினம்
பல்லினைக் காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தின்
எலையிற்றப் புக்கிடவே காந்தமாய் எனக்காமிடத்தே
அல்லற் றென்றிருப் பேனத்தானே கயிலாயத்தனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சிலர் வேண்டுகோளால் ஒரு கலியாண வீட்டிற்சென்று தம்பதிகளைப் பார்த்து பாடிய திருவிருத்தம்***

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசற் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வழியறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.

## உடற் கூற்று வண்ணம்

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்தன
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனா

ஒரு மடமாது ஒருவனுமாகி
இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி யொழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறு துளி மாது
2பண்டியில் வந்து புகுந்து திரண்டு
3பதும வரும்பு கபடமி தென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகளென்று
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பது மொன்றுநி றைந்து மடந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளுமறிந்து
மகளிர்கள் சேனை தாவணை யாடை
மண்பட வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் 2கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளிநகை யூறல் இதழ்மட வாரும்
உவந்துமு கந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப
உடைமணி யாடை யரைவட மாட
வுண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து 3புழுதி யலைந்து
தேடிய பாலரோ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குருவுப தேச
முத்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும் வந்து
மயிர்முடி கோதி 4யறுபதநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க
மதன சொரூப நிவனென மோக
மங்கையர் கண்டும ருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
மாயில் போலவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மா 1முதல் சேர வழங்கி
ஒருமுத லாகு முதுபொரு ளாயி
ருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வன்மையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோதகு ரோதம டைந்து
செங்கை யினிலோர் தடியு மாகியே
வருவது போவு தொருமுது கூனு
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மிழந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல்வி டாமல் மொழிந்து
துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சுமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
2தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவும் இராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சமும் அலைந்து மருண்டு
திடமு முலைந்து மிகவு மலைந்து
தேறிந லாதர வேதென நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்முறை பேசும் எனவுரை நாவு
    றங்கி விழுந்துகை கொண்டு பொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
    பூதமும் நாலுசு வாசமும் நின்று
    நெஞ்சு தடுமாறி வரும் நேரமே.

வளர்பிறை போல வெயிறு முரோம
    முஞ்சடை யுஞ்சிறு குஞ் சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
    மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசியுயிர்கொடு போக
    மைந்தரும் வந்துகு னிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
    மாழ்கின ரேயிவர் காலம றிந்து
பழையவர் காணும் எனுமய லார்கள்
    பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
    வேபிணம் வேக்வி சாரியு மென்று

பலரையு மேவி முதியவர் தாமி
    ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களப மணிந்து
    பாவக மேசெய்து நாறுமுடம்பை
வரிசை கெடாமல் எடுமென வோடி
    வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
    மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி யழல்கொடு போட
    வெந்துவி ழுந்து முறிந்து 1நிணங்கள்
உறுகி யெலும்பு கருகி யடங்கி
    யோர்பிடி நீறுமி லாத வுடம்பை
    நம்புமடி யேனை யாளுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளலார் அருளிய பாடல்கள்

ஒற்றி யூரனைப் பற்றி நெஞ்சமே
நிற்றி நீயருட் பெற்றி சேரவே
முத்தி வேண்டுமேல் பத்தி வேண்டுமால்
சத்தி யம்மிது புத்தி நெஞ்சமே.

அழுத பிள்ளைக்கே பாலுண வளிப்பாள்
அன்னை என்பார்கள் அழவலி யில்லாக்
கொழுது நேர்சிறு குழவிக்கும் கொடுப்பாள்
குற்ற மன்றது மற்றவள் செயலே

கொழுது நின்னடி துதிக்கின்றோர்க் கெனவே
துட்ட னேனுக்கும் சூழ்ந்தருள் செயலாம்
செழுது மாதவி மலர்திசை மணக்கத்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே.

துன்னு மாமருந் தேசுடரே அருள்
மன்னு மாணிக்க மேவல்லி கேசரே
துன்னு கந்தையைச் சுற்றிநிற்பீர்எனில்
என்ன நீர்எமக் கீயும் பரிசதே.

நில்லா உடம்பை நிலையென்றே நேசிக்கும்
பொல்லாத நெஞ்சப் புலையனேன் இவ்வுலகில்
சொல்லா மனநோயால் சோர்வுற்(று) அலையுமல்லல்
எல்லாம் அறிவாய் எழுத்தறியும் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வண்ணம் நீ தேறி நெஞ்சமே
உய்யும் வண்ணமாம் ஒற்றி யூர்க்குளே
மெய்யும் வண்ணமா ணிக்க வெற்பருள்
பெய்யும் வண்ணமே பெறுதல் வேண்டுமே

ஆதி யேதில்லை அம்பலத் தாடல் செய்
சோதி யேதிருத் தோணிபு ரத்தனே!
ஓதி யேதரும் ஒற்றியப் பாஇது
நீதி யோஎனை நீமரு வாததே.

மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டினையோ
மால யன்பெறும் வாழ்வுவேண் டினையோ
அன்ன ஊர்திபோல் ஆகவேண் டினையோ
அமையும் இந்திர னாகவேண் டினையோ
என்ன வேண்டினும் தடையிலை நெஞ்சே
இன்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே
வன்னி ரஞ்சடை எம்பிரான் ஒற்றி
வளங்கொள் ஊரிடை வருதி என் னுடனே.

பற்றும் செழுந்தமிழால்
பாடுகின்றோர் செய்தபெருங்
குற்றம் குணமாகக்
கொள்ளும் குணக்கடலே
மற்றங்கும் எண்தோள்
மலையே மரகதமே
பெற்றிங் கடியேன்
பிணிகெடுத்தால் ஆகாதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர் தம் மனத்தே இன்பமுற் றவைகள்
அளித்தவர்க் களித்திடப் புரியும்
பொன்பொலி மேனிக் கருணையங் கடலே
பொய்யனேன் பொய்மைகண் டின்னும்
துன்பமுற் றலையச் செய்திடேல் அருளைத்
தொன்னக ரிடத்துன(து) எழில் கண்(டு)
என்புளம் உருகத் துதித்திடல் வேண்டும்
இவ்வரம் எனக்கிவண் அருளே

நான்செயும் பிழைகள் பலவும்நீ பொறுத்து
நலந்தரல் வேண்டுவன் போற்றி
ஏன்செய்தாய் என்பார் இல்லைமற் றெனக்குன்
இன்னருள் நோக்கம்செய் போற்றி
ஊன்செய்நா வால்உன் ஐந்தெழுத்(து) எளியேன்
ஓதநீ உவந்தருள் போற்றி
மான்செயும் நெடுங்கண் மலைமகள் இடங்கொள்
வள்ளலே போற்றிநின் அருளே.

கல்லையும் உருக்கலாம் நாருரித் திடலாம்
கனிந்தகனி யாச்செய் யலாம்
கடுவிடம் உண்ணலாம் அமுதாக்க லாம்கொடுங்
கரடிபுலி சிங்க முதலா
வெல்லுமிரு கங்களையும் வசமாக்க லாமன்றி
வித்தையும் கற்பிக் கலாம்
மிக்கவா ழைத்தண்டை விறகாக்க லாம்மணலை
மேவுதேர் வடமாக் கலாம்

இல்லையொரு தெய்வம்வே றில்லையெம் பால்இன்பம்
ஈகின்ற பெண்கள் குறியே
எங்கள்குல தெய்வம்என்னும் மூடரைத் தேற்றஎனில்
எத்துணையும் அரிதரிது காண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லையவர் உணர்கிற மருந்தருள் தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேஞூரில் அன்பர்பவ ரோகமற
வளர்வயித் தியநாதனே.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் உயிர்ஒளிர் அறவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புரு வாம்பர சிவமே.

சாதிமதம் சமயம்எனும் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே றாடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்
ஆதியந்த நிலையறியேன் அலையறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவும் அறியேன்
நீதிநெறி நடந்தறியேன் சோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தையறிவேனோ
ஏதிலர்சா ர்உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதுமறிந்திலனே

தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ யாதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மையப் பாஇனி ஆற்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெலாம் போதுமிந்தப் பயந்தீர்ந்திப்பொழுதென்
உடல்உயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
உடல்உயிரா தியவெல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய்என் கண்ணுள்
மணியேஎன் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே.

வாழையடி வாழை என வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவனன்றோ வகையறியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ? இதுமுறையோ? இது தருமந்தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால் யான்உனக்கு
மகனலனோ நீஎனக்கு வாய்த்த தந்தைஅலையோ
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருளொளியைக் கொடுத்தரு
ளிப்பொழுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில்நின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலும் இசையுமணிந் தருளே.

வாழியென் ஆண்டவன் வாழிஎங்
கோனருள் வாய்மையென்றும்
வாழியெம் மான்புகழ் வாழியென்
நாதன் மலர்ப்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப்
பெருநெறி மாண்புகொண்டு
வாழியிவ் வையமும் வானமும்
மற்றவும் வாழியவே.

***(அன்பின் உதித்தது சிவ வழிபாடு என்ற கொள்கையை நரம்பு ஸ்தானமாக அமைத்து, உலகியலில் உழலும் மாந்தரின் அகக்கண்ணைத் தமது தேன்சொரியும் தீந்தமிழ்ப் பாடல்களால் திறந்தவர், வள்ளலார் பெருமான்.)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர் பாடல்கள்

ஆழாழி கரையின்றி நிற்கவிலையோ கொடிய
ஆலமமு தாகவிலையோ?
அக்கடலின் மீதுவட வனல்நிற்க வில்லையோ?
அந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்க வில்லையோ? மேருவும்
தனுவாக வளையவிலையோ?
சத்தமே கங்களும் வச்ரதரன் ஆணையின்
சஞ்சரித் திடவில்லையோ:
வாழாது வாழவே இராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாகவிலையோ?
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித்திகள் உலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ?
பாழான என்மனம் குவியஒரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல் லாங்கட்டி
யாளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேயினும் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நான்எனக்
குளறியே ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே.

உடல்குழைய என்பெலாம் நெக்குருக
விழிநீர்கள் ஊற்றென வெதும்பியூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவு முன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பிஆர்த் தார்த்தெழுந்து
மடலவிழும் மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானே அவானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழிஎன வாழ்த்தியேத்தும்
கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ?
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை
அகிலத்தின் மிசையுள்ளதோ?
ஆடிய கறங்குபோல் ஓடியுழல் சிந்தையை
அடக்கியொரு கணமேனும்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிலேன் திருவருளை அல்லாது மௌனியாய்க்
கண்மூடி ஓடுமூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
கனலினை எழுப்ப நினைவும்
பூணிலேன் இற்றைநாள் கற்றதும் கேட்டதும்
போக்கிலே போகவிட்டுப்
பொய்யுலக னாயினேன் நாயினும் கடையான
புன்மையேன் இன்னமின்னம்
வீணிலே அலையாமல் மலையிலக் காகநீ
வெளிப்படத் தோற்றல்வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

கண்ணார நீர்மல்கி உள்ளம்நெக் குருகாத
கள்ளனேன் ஆனாலுமோ
கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரைகாட்டி
அண்ணா பரஞ்சோதி அப்பா உனக்கடிமை
யானெனவும் மேலெழுந்த
அன்பாகி நாடகம் நடித்ததோ குறைவில்லை
அகிலமும் சிறிதறியுமேல்
தண்ணாரும் நின்னதருள் அறியாத தல்லவே?
சற்றேனும் இனிதிரங்கிச்
சாசுவத முத்திநிலை ஈதென் றுணர்த்தியே
சகசநிலை தந்துவேறென்று
எண்ணாமல் உள்ளபடி சுகமாய் இருக்கவே
ஏழையேற் கருள்செய்கண்டாய்
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்ற பொருளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகமா னவைகோடி கூடிநின் றாலும்ஒரு
கல்லின்முன் எதிர்நிற்குமோ?
கர்மமா னவைகோடி முன்னேசெய் தாலும்நின்
கருணைப்ர வாகஅருளைத்
தாகமாய் நாடினரே வாதிக்க வல்லவோ
தமியனேற்கு அருள்தாகமோ
சற்றுமிலை என்பதுவும் வெளியாச்சு வினையெலாம்
சங்கேத மாய்க் கூடியே
தேகமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராமல் யோகமார்க்க
சித்தியோ வரவில்லை சகசநிஷ் டைக்குமென்
சிந்தைக்கும் வெகுதூரம்நான்
ஏகமாய் நின்னொடு இருக்கும்நாள் எந்தநாள்
இந்நாளின் முற்றுறாதோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும்நிறை கின்ற பொருளே!

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றெரு
சரீரத் தினும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அறிந்தவரும் ஏதுமறி யாதவரும்
இல்லையெனும் இவ்வுலகமீது
ஏதுமறி யாதவன் எனப்பெயர் தரித்துமிக
ஏழைக்கு ளேழையாகிக்
கல்லாத அறிவில் கடைபட்ட நான் அன்று
கையினால் உண்மை ஞானம்
கற்பித்த நின்னருளி னுக்கென்ன கைம்மாறு!
காட்டுவேன் குற்றவேல்நான்
அல்லார்ந்த மேனியொடு குண்டுகண் பிறைஎயிற்று
ஆபாச வடிவமான
அந்தகா நீயொரு பகட்டால் பகட்டுவ
தடாதடா காசுநம்பால்
செல்லா தடாஎன்று பேசவா யதுதந்த
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!

"தந்தைநீ தாயும்நீ என்னுயிர்த் துணையும்நீ
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ உனை அலால்
மற்றெரு துணை காணேன்
அந்த மாதியும் அளப்பருஞ் சோதியே
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவெனும்
சிரகிரிப் பெருமானே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால பயம் போக்கும் காலபாசத் திருப்பதிகம்

கண்டு கொள்ளரியானைக் கனிவித்துப்
பண்டு நான் செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்டபாணி கொடுகொட்டி தாளம்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலும் சூழலே.

நடுக்கத் துள்ளும் நசையுளும் நம்பர்க்குக்
கடுக்கக்கல்ல வடம் இடுவார் கட்குக்
கொடுக்கக் கொள்க என உரைப்பார்களை
இடுக்கண் செய்யப் பெறீா இங்கு நீங்குமே.

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமம் சிவன் என்று அரற்றுவார்
ஆர்களாகிலும் ஆக அவர்களை
நீர்கள் சாரப் பெறீா இங்கு நீங்குமே

சாற்றினேன் சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றம் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்றவும் களிப்பட்ட மனத்தராய்ப்
போற்றி என்று உரைப்பார்புடை போகலே.

இறை என்சொல் மறவேல் நமன் தூதுவீர்
பிறையும் பாம்பையும் உடைப்பெருமான் தமர்
நறவம் நாறிய நல்நறும் சாந்திலும்
நிறைய நீறணிவார் எதிர்செல்லலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாமதேவன் வளநகர் வைகலும்
காமம் ஒன்றிலராய்க் கைவிளக்கோடு
தாமம் தூபமும் தண்நறும் சாந்தமும்
ஏமமும் புனைவார் எதிர் செல்லலே.

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன்மின் நமதீசன் அடியரை
விடைகொள் ஊர்தியினான் அடியார் குழாம்
படைபு காது நீர் போற்றியே போமினே.

விச்சை ஆவதும் வேட்கைமை யாவதும்
நிச்சல் நீறணிவாரை நினைப்பதே
அச்சம் எய்தி அருகணை யாதுநீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே

இன்னன் கேண்மின் இளம் பிறைசூடிய
மன்னன் பாதம் மனத்துடன் ஏத்துவார்
மன்னும் அஞ்செழுத்தாகிய மந்திரம்
தன்னில் ஒன்று வல்லாரையும் சாரலே.

மற்றும் கேண்மின் மனப்பரிப்புஒன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை ஏறுடையான் அடியேன் அலால்
பற்று ஒன்றில்லிகள் மேற்படை போகலே.

அரக்கன் ஈரைந்தலையும் ஓர் தாளினால்
நெருக்கி ஊன்றி இட்டான் தமர் நிற்கிலும்
சுருக்கெனாது அங்குப் பேர்மின்கண் மற்றுநீர்
சுருக்கெனில் சுடரான் சுழல் சூடுமே.

***'ஐயுணர்வு எய்திக் கண்ணும் பயமின்றே***
***மெய்யுணர்வு இல்லாதவர்க்கு'***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் ஒரு தத்துவம்; படைத்த இறைவனோ அதைவிடப் பெரிய தத்துவம். இதை மறுப்பார் இல்லை. ஞானிகள் தத்துவங்களை ஆராய்ந்து சாத்திரங்களை வகுத்தார்கள். சாத்திரங்களிலிருந்து இறைவழிபாடு தோன்றியது: இறை வழிபாட்டைச் சிறப்பிக்க பத்திமிளிரும் தோத்திரங்களை இயற்றினார்கள், பத்தியில் திளைத்த பெரியோர். சைவ நெறியைப் பின்பற்று வோருக்குத் திருமுறைகள்,தோத்திரங்கள் சிவஞான போத சாஸ்திரம். மெய்கண்டதேவ நாயனார் அருளியிருக்கும் சிவஞானபோதம் சிவாத்வைதத்தின் சாரம்: சிவனடியார்களின் சாஸ்திரப் பொக்கிஷம். எளிய, இனிய சொற்களைக் கொண்டு இரத்தினச் சுருக்கமாக சிவதத்துவத்தின் சிறப்பைக் காட்டியருளியுள்ளார் மெய்கண்டதேவர். **"ஓம் நமசிவாய"** என்ற பஞ்சாக்கரத்தை இமைகளுக்கு இடையே, லிங்க சொருபத்தில் வைத்து, உலகச் சூழ்நிலைகளை மனித்தினின்று அகற்றி, வைராக்யகியமாக ஜபம் செய்வது உத்தமம்.

# சிவஞான போதம

**(*மங்கல வாழ்த்து*)**

**கல்லால் நிழன்மலை**
**வில்லார் அருளிய**
**பொல்லார் இணைமலர்**
***நல்லார் புனைவரே***

## முதற் சூத்திரம்

அவன் அவள் அதுவெனும் அவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் சூத்திரம்

அவையே தானே யாய் இரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே

## மூன்றாம் சூத்திரம்

உளதில தென்றலின் எனதுட லென்றலின்
ஐம்புலன் ஒடுக்க மறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா

## நான்காம் சூத்திரம்

அந்தக் காரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே

## ஐந்தாம் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

## ஆறாம் சூத்திரம்

உணருரு அசத்தெனின உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே

## ஏழாம் சூத்திரம்

யாவையும் சூனியம் சத்தெதி ராகலிற்
சத்தே அறியா தசத்தில தறியா
திருதிறன் அறிவுள திரண்டலா வான்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே

## ஒன்பதாம் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே

## பத்தாம் சூத்திரம்

அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே

## பதினொன்றாம் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

## பன்னிரண்டாம் சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குருநாதன்

*ஈழத்துக் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள் தம்மை தடுத்தாட்கொண்டு தன்னில் தன்னை தன்னால் காட்டியருளிய சித்தன் நல்லை வாசனாம் செல்லப்பா சுவாமிகளின் திருவருட் பேற்றை வியர்ந்து பாடிய பதிகம்.*

என்னையெனக் கறிவித்தா னெங்கள் குருநாதன்
இனையடியென் தலைவைத்தானெங்கள் குருநாதன்
அன்னை பிதாக் குருவானா னெங்கள் குருநாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள் குருநாதன்
முன்னை வினை நீக்கி விட்டா னெங்கள் குருநாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள் குருநாதன்
நன்மை தீமை யறியாதா னெங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றா னெங்கள குருநாதன்

தேகம் நீ யல்ல வென்றா னெங்கள் குருநாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள் குருநாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள் குருநாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள் குருநாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள் குருநாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள் குருநாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள் குருநாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள் குருநாதன்

வாசியோகந் தேரென்றா னெங்கள் குருநாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள் குருநாதன்
காசி தேசம் போவென்றா னெங்கள் குருநாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள் குருநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசி நுனி நோக்கென்றா னெங்கள் குருநாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள் குருநாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள் குருநாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள் குருநாதன்

இருவழியை அடையென்றா னெங்கள் குருநாதன்
எல்லாம் விளங்கு மென்றா னெங்கள் குருநாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள் குருநாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள் குருநாதன்
ஒருவரு மறியாரென்றா னெங்கள் குருநாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள் குருநாதன்
நிருமலனாயிருவென்றா னெங்கள் குருநாதன்
நீயேநா னென்று சொன்னா னெங்கள் குருநாதன்

திக்குத் திகாந்த மெல்லா மெங்கள் குருநாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள் குருநாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள் குருநாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள் குருநாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள் குருநாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள் குருநாதன்
நெக்கு நெக்கு உருகென்றா னெங்கள் குருநாதன்
நித்தியன் நீ யென்றுசொன்னா னெங்கள் குருநாதன

தேடாமல் தேடென்றா னெங்கள் குருநாதன்
சீவன் சிவனென்றா னெங்கள் குருநாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள் குருநாதன்
நல்லவழி தோன்று மென்றா னெங்கள் குருநாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள் குருநாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள் குருநாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள் குருநாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள் குருநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கு மொருமொழியா லெங்கள் குருநாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள் குருநாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள் குருநாதன்
எல்லாம் நீ யென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள் குருநாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள் குருநாதன்
தத்துவா தீதனானா னெங்கள் குருநாதன்
சகல சம்பத்துந்தந்தா னெங்கள் குருநாதன்

ஆதியந்த மில்லையென்றா னெங்கள் குருநாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
சோதிமயமென்று சொன்னா னெங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள் குருநாதன்
சாதி சமயமில்லா னெங்கள் குருநாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள் குருநாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந் தந்தா னெங்கள் குருநாதன்

முச்சந்திக் குப்பையிலே யெங்கள் குருநாதன்
முடங்கிக் கிடந்திடென்றா னெங்கள் குருநாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள் குருநாதன்
ஆணவத்தை நீக்கி விட்டா னெங்கள் குருநாதன்
பச்சை புரவியிலே எங்கள் குருநாதன்
பாங்காக ஏற்றென்றா னெங்கள் குருநாதன்
தச்சன் கட்டா வீட்டிலே யெங்கள் குருநாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள் குருநாதன்

நாமே நா மென்று ரைத்தா னெங்கள் குருநாதன்
நமக்குக் குறைவில்லை யென்றா னெங்கள் குருநாதன
போமே போம் வினையென்றா னெங்கள் குருநாதன்
போக்கு வர வில்லையென்றா னெங்கள் குருநாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள் குருநாதன்
ஓமென்றுறுதிதந்தா னெங்கள் குருநாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள் குருநாதன்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

serial No 092900

22.09.08 - 22.9.09

17%

Co Reg No

PQ9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது ஆன்மீக நூல்கள்

| | ரூபா |
|---|---|
| தோத்திரத்திரட்டு | 95 |
| திருவாதவூரடிகள் புராணம் | 150 |
| கவசத்திரட்டு | 75 |
| வைகுந்தஅம்மானை | 75 |
| கந்தபுராணக்கதை | 100 |
| சைவவினாவிடை I, II | 75 |
| சைவவினாவிடை I | 25 |
| பஜனாவழி | 95 |
| சித்திரபுத்திரநாயனார் கதை | 75 |
| சோதிடவினாவிடை | 200 |
| அர்ச்சனைமாலை | 40 |
| கோவில் வழிபாட்டுமுறை | 25 |
| சைவநெறிக்கதைகள் – தொகுதி 1 | 50 |
| சைவநெறிக்கதைகள் – தொகுதி 2 | 50 |
| மாரியம்மன்தாலாட்டு | 10 |
| துர்க்கைவழிபாடு | 10 |
| ஸ்ரீமாருதிகவசம் | 15 |
| திருவிளக்குவழிபாடு | 10 |
| கேதாரகௌரிவிரதம் | 15 |
| கந்தசஷ்டிகவசம் (ஆறுகவசம்) | 10 |
| தோத்திரத்திரட்டு (தினசரி வழிபாடு) | 25 |
| திருக்குறள் (மூலம்) | 15 |
| திருவெம்பாவை | 10 |
| பிள்ளையார்கதை | 10 |
| கிருஷ்ணகவசம் | 10 |
| நித்தியகருமவிதி | 5 |
| நவராத்திரிபாமாலை | 10 |
| நித்திய பாராயணத்திரட்டு | 25 |
| தோத்திரப்பாமாலை | 150 |


ஆன்மீக நூல்களின் கருவூலம்

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**

**320, செட்டியார் தெரு, கொழும்பு - 11.**

**தொலைபேசி : 334004**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org